# செந்தமிழ்

தொகுதி 85 மார்ச்சு 91 பகுதி 1

காலாண்டு இதழ்

ஆசிரியர் மா. தனுக்கோடிபாண்டியன், பி.ஏ.பி,எல்.

**மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை-1.**

பொறுப்பாசிரியர் : பேராசிரியர் டாக்டர்
நா. பாலுசாமி, எம்.ஏ.,பி.எல்.,எம்.லிட்.,பி.எச்.டி.

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | தொன்னூல் விளக்கம்<br>-டாக்டர். பெ. சுயம்பு | 3 |
| 2. | தொல்காப்பியப் புறத்திணை வளர்ச்சி<br>-டாக்டர். கி. இராசா | 19 |
| 3. | சிறுபொழுது<br>சி. கணேசய்யர் | 24 |
| 4. | இருமொழி அகராதிகளில் பல பொருள் ஒரு சொல்<br>-டாக்டர் ஏ. ஆதித்தன் | 35 |
| 5. | பழமையை விரும்பிய பாரதிதாசனார்<br>-டாக்டர். வே. இரா. மாதவன் | 44 |
| 6. | வள்ளுவர் காட்டும் வாழ்க்கைநெறி<br>-ஆசிரியர் வீ. இராமாநுசம் | 52 |
| 7. | நூல் மதிப்புரை<br>-டாக்டர் சு. ஆவுடையப்பன் | 55 |



# தொன்னூல் விளக்கம்

(டாக்டர். பெ. சுயம்பு
துணைப் பேராசிரியர்
ஆதித்தனார் கல்லூரி
திருச்செந்தூர்).

தமிழ் இலக்கண நூல்களுள் தொன்னூல் விளக்கத்திற்குக் குறிப்பிடத் தகுந்த பெருமை உண்டு. வீரமாமுனிவர் என்று தமிழ்ச் சான்றோரால் போற்றப்படுகின்ற கான்சுடான்சியசு சோசபு பெசுகி எழுதிய நூல் இது; தமிழ் நன்கு உணர்ந்த மாந்தர் படித்துணரும் வகையில் இயற்றப்பட்டுள்ளது. இந்நூல் நூற்பாவும் அதற்கு உரையுமாக அமைந்துள்ளது. நூற்பாவில் சுருங்க உரைத்த இலக்கணம், உரையில் விரிவாக விளக்கப்பட்டுள்ளது. உரையும் நூலாசிரியராலேயே எழுதப்பட்டுள்ளது. பெரும்பான்மை நூற்பாக்கள் முனிவரால் இயற்றப்பட்டவை. எனினும் நன்னூல், தண்டியலங்காரம் போன்ற முன்னூல்களின் நூற்பாக்கள் முழுமையாகவோ சிறிது மாற்றத்துடனோ ஏற்கப் பட்டுள்ளன.

ஐந்தா வதனுரு பில்லு மின்னு
நீங்கலொப் பெல்லை யேதுப் பொருளே (தொன். 60)

ஆற னொருமைக் கதுவு மாதுவும்
பன்மைக் கவ்வு முருபாம் பண்புறுப்
பொன்றன் கூட்டம் பலவி னீட்டந்
திரிபி னாக்கஞ் சேர்ந்ததற் கிழமையும்
பிறிதின் கிழமையும் பேணுதற் பொருளே (தொன். 61)

வியங்கோ ளியலும் விகுதிக் கவ்விய
யவ்வொடு ரவ்வொற்று மிவையெங்கு மேற்பன
வாழிய வென்பத னீற்றி னுயிர்மெய்
யேகலு முரித்தஃ தேகினு மியல்பே (தொன். 116)

குளக மொருவினை கொளும்பல பாட்டே (தொன்.252)
தொகைநிலைச் செய்யு டோன்றக் கூறி
னொருவ னுரைத்தவும் பல்லோர் பகர்ந்தவும்
பொருளிடங் காலந் தொழிலென நான்கினும்
பாட்டினு மளவினும் கூட்டிய தாகும் (தொன்.253)

பெருங்காப் பியநிலை பேசுங் காலை
வாழ்த்து வணக்கம் வரும்பொரு ளிவற்றினொன்
.... .... ... .... ... ... .... .... ... ....
நெருங்கிய சுவையும் பாவமும் விரும்பக்
கற்றோர் புனையும் பெற்றிய வென்ப
கூறிய வுறுப்பிற் சிலகுறைந் தியலினும்
வேறுபா டின்றென விளம்பினர் புலவர் (தொன்.256)

**உரை**

இந்நூலுக்கு வரையப்பட்டுள்ள உரை கருத்து, எடுத்துக் காட்டு, கருத்தினுக்கு ஆதாரமான முன்னூல்களின் நூற்பா எனும் செய்திகளை அடக்கியுள்ளது. உரைத்தொடக்கம் நுதலிப் புகுதலுடன் ஆசிரியர் தற்கூற்றாகக் காணப்படுகிறது.

வியங்கோ .. ... ... ... .... மியல்பே (தொன்.116)

(இ-ள்) வியங்கோள் விகுதிகளாமாறுணர்த்துதும். க.ய ர், விகுதி மூவிடத்தைம்பாற்கண்ணு மேற்கும் வியங்கோளாம் (உ-ம்) வாழ்க, வாழிய, வாழியர், (எ-ம்) நான் வாழ்க, நீ வாழ்க, அவன் வாழ்க, அவள் வாழ்க, அவர் வாழ்க, அது வாழ்க, அவை வாழ்க, என வரும். மற்ற விகுதியுமிவ்வா றொட்டுக. அன்றியும், வாழியவென்னும் வியங்கோளீற்று யகரங்கெட்டு வாழியெனவரின் வல்லினமிரட்டா. (உ-ம்) வாழிகொற்ற, வாழிதேவ, வாழி பூத, வாழி செல்வ, என வரும். – நன்னூல் - 'கயவொடு ரவ்வொற்றீற்ற வியங்கோ ளியலு மிடம்பாலெங்கு மென்ப – வாழிய வென்பதனீற்ற னுயிர்மெய், யேகலு முரித்தஃ தேகினு மியல்பே! இவை மேற்கோள். (எ–று).

முனிவரின் உரை பழைய உரையாசிரியர்களாகிய இளம்பூரணர், சேனாவரையர், நச்சினார்க்கினியர் போன்றோ

ரின் நடையை ஒத்துளது. சொற்கள் பிரித்தெழுதப்படாமல், புணர்ச்சி வரம்போடு தொடர்கின்றன. எடுத்துக்காட்டுக்கள் 17-ஆம் நூற்றாண்டை வெளிப்படுத்துதலின்றி, தொல்காப்பிய உரையாசிரியர்களைத் தழுவி,அவர்கள் தந்தனவாகவே கொற்ற, பூத என்பன போன்று அமைந்துள்ளன. எனினும் பல்வேறு இலக்கியங்களினின்று பல சான்றுகளை இலக்கணத்திற்கு எடுத்துக் காட்டியுள்ளதையும் ஆங்காங்கே பரவலாகக் காண முடிகின்றது. இவ்விலக்கியங்கள் பல்வேறு காலத்தைச் சார்ந்தனவாகும். இந் நூலாசிரியரால் இயற்றப்பட்ட தேம்பாவணி, திருக்காவலூர்க் கலம்பக விருத்தம் போன்ற இலக்கியங்களும் இவற்றுள் அடங்கும்.

அகத்தியம், தொல்காப்பியம், வீரசோழியம், நேமிநாதம். நன்னூல், இலக்கண விளக்கம், யாப்பருங்கலம், யாப்பருங்கலக் காரிகை, அகப்பொருள் விளக்கம், புறப் பொருள் வெண்பா மாலை, தண்டியலங்காரம், காக்கைப் பாடினியார், மயேச்சுரர் யாப்பு, பல்காயனார், நற்றத்தனார் இலக்கணத்திரட்டு, வெண் பாப்பாட்டியல், விருத்தப்பாட்டியல் போன்ற இலக்கணநூல்கள் ஆசிரியர் இந்நூலை எழுதிட ஆதாரச்சான்றாகக் காணப்படுகின் றன. இவற்றுள் நன்னூல் எழுத்து, சொல் இலக்கணங்களுக்குப் பெரிதும் துணையாயிற்று என்பதனைப் பரவலாகக் காணப்படும் மேற்கோள் நூற்பாக்கள் வெளிப்படுத்துகின்றன. அகப் பொரு ளுக்கு நம்பியகப் பொருள் விளக்கம், இலக்கண விளக்கம் ஆகியன வும்,புறப்பொருளுக்குப் புறப்பொருள் வெண்பாமாலையும் ஆதா ரங்களாகும். அணியிலக்கணம் தண்டியலங்காரத்தைப் பெரிதும் பின்பற்றிச் செல்கின்றது. யாப்பருங்கலமும் காரிகையும் யாப் பிலக்கணத்திற்குத் துணை புரிந்த நூல்களாகும். பாட்டியலைப் பொறுத்த வரையில் ஆசிரியர் வெண்பாப் பாட்டியலையும் விருத் தப் பாட்டியலையும் தழுவி இலக்கணம் அமைத்துள்ளார்.

ஆசிரியர்உரையில் மேற்கோள்காட்டும் அகத்தியர், மயேச் சுரர், பல்காயனார், நற்றத்தனார், காக்கைப்பாடினியார் போன் றோர் நூல்கள் மறைந்து பல காலமாயிற்று. எனவே இப்புலவர் களின் நூல்களை முழுமையாக ஆசிரியர் படித்திருக்கும் வாய்ப்பு இல்லை. எனினும் யாப்பருங்கல விருத்தி போன்ற பழைய உரை களில்காணப்படும் நூற்பாக்களைப்படித்து, முந்தையஉரைகாரர்

களைப் போன்று இப்புலவர்களின் நூற்பாக்களை இவரும் மேற்கோள் காட்டியுள்ளார். இதுவும் ஓர் உரை மரபே.

திருக்குறள், நாலடியார், முதுமொழிக் காஞ்சி, திரிகடுகம், சீவக சிந்தாமணி, கம்பராமாயணம், தேம்பாவணி, திருக்காவலூர்க் கலம்பகம், உபதேசக்காண்டம், காசிக் காண்டம், அகவல், ஔவைக் குறள், மூதுரை, இருமொழிமாலை, விருத்தம் மெய்ம்மறையாசாரியனார் நூல், நைடதம், நியாய சூடாமணி, பிங்கலம், திவாகர நிகண்டு, ஆசிரிய நிகண்டு போன்ற நூல்களிலிருந்து சான்றுகள் உரையில் காணப்படுகின்றன.

பழைய நூல்களிலிருந்து மேற்கோள்தருங்கால் தொல்காப்பியம், தேம்பாவணி என்று நூற்பெயரைச் சுட்டுதலன்றி, தொல்காப்பியனார் திருவள்ளுவ நாயனார், மெய்ம்மறையாசாரியனார் என்றுஆசிரியர் பெயரைச்சுட்டிச் செல்லும்இயல்பும் இந்நூற்கண் உளது.

தொன்னூல் விளக்கம் எனும் இந்நூல் நூற்பா அளவில் 370 நூற்பாக்களோடு நிறைவுறுகின்றது. இதன்உரை நூற்பாவில்இல்லாத, ஆனால் தொடர்புடைய செய்திகளை எல்லாம் விரிவாக முன்னோர் நூல்களின் சான்றுகளோடு விளக்கிச்செல்கின்றது.

பாப்பொருளளவாதி பலபெயருளபிற (தொன் 282)

... ...... ... சூத்திரத்துட் பிறவென்ற மிகையான் மற்றப் பிரபந்தங்கள் வருமாறு :

ஐந்திணைச் செய்யுள்:– புணர்தன் முதலிய வைந்துரிப் பொருளும் விளங்கக் குறிஞ்சி முதலிய வைந்திணையினையும் கூறுவது .......

இந்நூற்பாவுக்கு உரிய உரையின்வழி ஆசிரியர், ஐந்திணைச் செய்யுள், வருக்கக் கோவை, அநுராக மாலை, பெருமகிழ்ச்சி மாலை, மெய்க்கீர்த்தி மாலை, காப்புமாலை, வேனின்மாலை, வசந்தமாலை, தாரகைமாலை, உற்பவமாலை, தண்டகமாலை, வாதோரணமஞ்சரி, எண்செய்யுள், ஒலியலந்தாதி, பதிற்றந்தாதி, நூற்றந்தாதி, வளமடல், கண்படைநிலை, துயிலெடைநிலை, பெயரின்னிசை, ஊரின்னிசை, பெயர்நேரிசை, ஊர்நேரிசை, ஊர்வெண்பா, விளக்குநிலை, புறநிலை, கடைநிலை, கையறு

நிலை, தசாங்கப்பத்து, தசாங்கத்தயல், அரசன் விருத்தம், நயனப் பத்து, பயோதரப்பத்து, கைக்கிளை, மங்கலவெள்ளை, தூது, நாற்பது, குழ மகன், தாண்டகம், பதிகம், சதகம், செவியறி வுறூஉ, பவனிக் காதல், குறத்திப்பாட்டு, உழத்திப்பாட்டு, கடிகை வெண்பா, முதுகாஞ்சி, இயன்மொழி வாழ்த்து, பெருமங்கலம் ஆகிய இலக்கியங்களின் இலக்கணத்தை விவரித்துள்ளார்.

சேனாவரையர் போன்று முனிவரும் வடமொழியை ஒப்பிடும் குறிப்பினை ஆங்காங்குத் தருகின்றார். இவ்வியல்பு வேற்றுமைகளை விளக்குமிடத்துச் சிறப்பாக இடம்பெற்றுளது.

> ...... செயப்படு பொருளை வடநூலார் கர்மம் என்பர். காரியம் எ-ம் வரும். (தொன். 57)

> ...... கருவியை வடநூலார் கரணம் என்பர், எ-று (தொன். 58)

1.481

> ...... இதனை [நாலாம் வேற்றுமையை] வடநூலார் சம்பிரதானம் என்பர், எ-று. (தான். 59)

> ...... வடநூலார் நீக்கப் பொருளை அபாதானம், எ-ம். எல்லைப் பொருளை அவதி எ ம். கூறுவர் (தொன்.60)

பாயிரம் :

இந்நூல் முகப்பில் உள்ள பொதுப் பாயிரம் தொன்னூல் விளக்கம் எனும் பெயரைச் சுட்டி, 'முந்தை நூற்களின் செய்திகளை உடன்பட்டும் சில மாறுதல்களைப் புகுத்தியும் பிறமொழிச் செய்தி சிலவற்றை ஒப்பிட்டும் சுருக்கமாக விளக்கும் வழிநூல்' என்று குறிப்பிடுகின்றது.

> மேவிய வைம்பொருள் விளக்க வுணர்ந்து
> விரிவிலாத் தொன்னூல் விளக்க மெனும்பெயர்த்
> தரியவா சிரிய ரருந்தமிழ்ச் சொல்லிற்
> பிறநூன் முடிந்தது பெயர்த்துடன் படுத்தியும்
> புறநூன் முடிந்தது பொருத்தியுந் தானொரு
> வழிநூன் முடித்தனன் வாய்ப்பரு மெய்ம்மறை
> மொழிநூ லத்தராய் முதிர்சிறப் பிணையி
> விரோமை நாட்டினின் றெய்திய முனிவருள்

விரோத மொழிதயை மேவுக
நேரமா தவத்தின் வீரமா முனியே.

ஒவ்வோர் அதிகார முகப்பிலும் தற்சிறப்புப் பாயிரம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அப்பாயிரம் நூல்தரும் இலக்கணத் திற்கேற்பத் தெய்வ வணக்கம் கூறி, அதிகாரத்தில் விளக்கப்பட விருக்கின்ற பொருளை நுதலிப்புகும் வகையில் அமைந்துளது. இப்பாயிரங்களுள் எழுத்ததிகாரத்தில் அமைந்தது தனிச் சிறப்பான உரையைக் கொண்டுள்ளது. இவ்வுரை நூல் இயற்றப் பட்டதன் நோக்கத்தினைத் தெளிவுறுத்துகிறது.

> ..... மூத்தோர் புதைத்த வரும்பயனாகிய பொருளைக் கண்டறிந் தெடுப்பதற் கிலக்கண நூலே விளக்காம்.விளக்கு தலால் விளக்கென்னப்பட்டது. ஒளி விடா மூடின தீபத் தாற் பயனில்லையென்றது போல முன்னோர் தந்த விலக்கண நூலெலாஞ் செந்தமிழ்ச் சிறந்த மொழியோடு மூடிக்கிடப்ப விக்காலத் தவ்விளக்கொளியைக் காண்பாரில் லாததற் கொரு பயனுமில்லை. தென்மொழியார்க்கு வட மொழியைத் தானுணர்த்தக் கருதியவர் முன்னறிந்த தமிழ்ச்சொற் கொண்டல்லவோ வடமொழிப் பயனை யுரைத்தல் வேண்டு மாகையான் மூத்தோர் புதைத்த நூனலம் விளங்கவுங் கல்லாதவரும் பயன்கொண்டுணரவு நானே யதன் மேற்கவித்த போர்வை நீக்கி யறிஞர் முன் கொளுத்தின தீபமெவர்க்கு மெரிப்பக் கையிலேந்தினாற் போல வவர்முன் செந்தமிழ் மொழியான் மறைத்த விலக்கண நூலை யிளந்தமிழுரையால் வெளிப்பொரு ளாக்க நினைத்தேனாயினு முன்னோர் தந்த யாவையும் விரித்துரைத்தா லிந்நூலும் பெருகிக் கண்டவ ரஞ்சித் துணியாரென்று கருதி முனமிக வறிய வேண்டுவதொன் றைத் தெரிந்து தருவேன் ... .... சிறியதோர் தெப்பத்தைப் பிடித்துப் பெரும் வெள்ளத்தை நீந்தினாற் போலவு மிங்ஙன நான்றந்தவற்றைக் கொண்டு செந்தமிழ்ப் பெருங் கடனீந்தவு முழுகவுஞ் செய்து முற்றுல கெல்லாம் புகழப் புலவர் புதைத்தப் பெரும்பயனவ மணித்தாமெடுத்தணி வதே யெளிதா மங்ஙன மீண்டு நானொரு புது நூலாயி னுந் தொன்னூலிற் கொரு புதுவழி யாயினுங் காட்டுவ துணரா துயர்ந்த முன்னோர் தந்த நூலை விளக்குதற்

கருதித் தெளிவு வேண்டி வேறு வேறாய்ச் சூத்திரந் தரினு மூத்தோ ருரைத்த பற்பலவற்றையும் பொருத்தும். ஆயினுஞ் செந்தமிழுணர்ந்தோர் வழியாயன்றிப் புறனடையாய்ச் சில விகற்பம் புறநூல் வழியே சென்று காட்டுது மாகையான் முன்னோர் நூலினடையாயினும் விகற்ப நடையாயினு மெழுத்துச் சொற்பொருளியாப் பணியென வைந்திலக்கணங்களை யைந்ததிகாரமாக வீண்டு பிரித்துக் கூறுதும். —

முந்தைய இலக்கண நூல்கள் அனைத்தும் புரிந்து கொள்ளுதற்கு அரிய கடுநடையில் அமைந்துள்ளமையால், அவை கூறும் கருத்துக்கள் எளிதில் விளங்கவில்லை இத்தகு அரிய புலப்பாட்டு நெறியே தமிழ்மொழி இலக்கணத்தைப் பெரும்பாலோர் அறிந்திராமைக்குக் காரணம் என்று முனிவர் கருதியமையை மேற்கண்ட உரைப் பகுதி வெளிப்படுத்துகின்றது. இதனால் யாவரும் (கல்லாதவரும்) எளிதில் அறிந்து கொள்ளும் வகையில் எளிய நடையில் இவ்விலக்கண நூலை இவர் எழுதினார். இந்நூல் தொன்னூல்களாய (தமக்கு) முந்தைய இலக்கண நூல்களில் கூறப்பட்டுள்ள கருத்துக்களுள் இன்றியமையாதவற்றை மட்டும் ஏற்றுத் தொகுத்து நூற்பா நடையில் தருகின்றது. மிகுதியான விளக்கம் கருதி, உரையினையும் சேர்த்துள்ளது. தமிழ்த் தொல்லாசிரியர் பலரும் தமிழுக்கு இலக்கணம் உரைத்தபோதிலும், தேவை கருதி வடமொழிக் குறிப்பையும் இணைத்துள்ளமையை இந்நூலாசிரியரும் பேணுகின்றார். மேலும், தொன்னூல் விளக்கம் என்னும் இந்நூல் ஒரு புதிய நூலன்று, தொன்னூல்களாகிய முந்தைய இலக்கண நூல்களை எளிதில் புலப்படுத்தும் விளக்க நூலே என்பது ஆசிரியரின் கருத்து.

அதிகாரந் தோறும் இறுதியில் அவ்வதிகாரத்தில் விவரிக்கப்பட்ட செய்திகளைத் தொகுத்துத் தரும் நூற்பாவொன்று காணப்படுகிறது.

**ஐந்திலக்கணம்**

எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி எனும் ஐந்திலக்கணங்களையும் முறையே எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம், யாப்பதிகாரம், அணியதிகாரம் எனும் ஐந்து அதிகாரங்களில் தொன்னூல் விளக்கம் விவரிக்கிறது. இத்தகைய

ஐவ்வகைப் பகுப்பு முறை வீரசோழியம், இலக்கண விளக்கம் ஆகிய நூல்களைப் பற்றியது எனலாம். தொல்காப்பியத்தில் எழுத்து, சொல், பொருள் எனும் மூவகைப் பகுப்பு முறையே காணப்படுகிறது. அந்நூல் பொருளைப் (meaning) புலப்படுத்தும் நெறிகளாக அணியையும் இசைவழி அமைந்த யாப்பையும் கருதுகின்றது.

எழுத்திலக்கணம் முப்பத்தொன்பது நூற்பாக்களில் சுருக்கமாகக் கூறப்பட்டு, உரையில் எஞ்சிய யாவும் விவரித்துரைக்கப் படுகின்றன. இவ்விலக்கணம் தோற்றம், வகுப்பு, விகாரம் என மூன்றாகப் பகுத்துக் கூறப்படுகின்றது.

தோற்றமும் வகுப்புந் தோன்றும் விகாரமுஞ்
சாற்றுழித் தோன்றுந் தானெழுத் தியல்பே தொன், 2)

எழுத்துக்களின் பிறப்பைத் (ஒலிப்பியல்)தோற்றம் என்றும் வகைகள் மற்றும் இயல்புகளை (ஒலியனியல்) வகுப்பு என்றும் புணர்ச்சியை (உருபொலியனியல்) விகாரம் என்றும் ஆசிரியர் சுட்டுகின்றார். இம்முறை வைப்பு இக்கால மொழியியலாரின் வைப்பினை ஒத்துள்ளது.

எழுத்துக்களின் பிறப்பு வீரசோழியம், நேமிநாதத்தில் உள்ளது. போன்று ஒரே நூற்பாவில் கூறப்பட்டுள்ளது. ஒவ்வோர் எழுத்தும் பிறக்குமாறு குறிப்பிடப்படவில்லை. எழுத்துக்கள் பிறக்குமாறு பொதுவாகச் சுட்டப்பட்டு, ஒலியுறுப்புக்கள் முதலிடம், துணையிடம் என்று வகை செய்யப்பட்டுள்ளது.

உயிரிடை யினமிட றுரம்வலியுச் சிமெலியிமை
முதலிட மாயிதழ் மூக்கணம் பன்னா
வைந்துணை யிடத்தா மக்கரப் பிறப்பே (தொன். 3)

மூச்சுக் காற்றுத் தங்கிச் செல்லும் காற்றறைகளை முதலிடம் என்றும், ஒலிப்பிடம் (Point of articulation),ஒலிப்பான் (articulator) ஆகியவற்றைத் துணையிடம் என்றும் ஆசிரியர் குறிப்பிடுகின்றார். மூக்கைக் காற்றறையாகக் கருதாது தொல்காப்பியத்தைப் போன்று ஓர் ஒலியுறுப்பாக இந்நூல் கருதுகிறது. மூக்கு வல்லொலியை மெல்லொலியாக மாற்றும் ஒலியூக்கி

யாகச் (resonater) செயல்படுகிறது. என்பது இங்குக் குறித்தற் குரியது.

ஒலிப்பியற் செய்திகளை விரித்துரைப்பது இலக்கண நூற்கு இன்றியமையாதது என்று மொழியியலார் கருதுகின்றனர். மொழியைப் பேசுதற்கு அதன் ஒலியமைப்பினை அறிந்து கொள்ளுதல் மிக இன்றியாதவொன்றாகும். ஆனால் இந்நூல் ஒலிப்பியற் செய்திகளை மிகை என்று கருதுகிறது.

> ...ஆயினும் இவற்றையும் எழுத்தின் முறையையும் எண்ணையும் உணர்த்துவ துறுபயனின்றிப் பொழுதழிவாகையானும், இனிச்சிலவுரைப்பது முறையாமென்றமையானும், இங்ஙனமவற்றை நீக்கிஎழுத்தின் வகுப்பும் விகாரமுமெனு மற்றிரண்டையும் விளக்கிக் கூறுதும். இதன் விரிவையுணர வேண்டில் தொல்காப்பியத்துட் காண்க. அதனினும் விரிவு பேரகத்தியம், நன்னூல், (எ-று).

வகுப்பு எனும் பகுதியில் எழுத்தின் வகைகளைத் தொன்னூல் விளக்கம் கூறுகிறது. இவ்வகையுள் புணர்பெழுத்து எனும் ஒன்றை இந்நூல் சுட்டுகிறது. இசைப்படுமெழுத்தே புணர்பெழுத்தெனப்படும் என்பது உரைச் (20) செய்தி. உயிரும் உயிரும் புணருங்கால் இடையில் தோன்றும் உடம்படுமெய் எழுத்துக்களாகிய ய், வ் என்பவற்றைப் புணர்பெழுத்து என்கிறார் ஆசிரியர். ஏனைய புணர்ச்சியில் தோன்றும் மிகுதிகளைப் போலன்றி, இவை இரண்டும் விட்டிசையைத் தடுத்து உடம் படுத்துவதால் இவ்வாறு கருதப்படுகின்றன போலும்! எவ்வாறாயினும், இவையும் புணர்ச்சியில் அமையும் மிகுதிகளே.

நன்னூல் கூறும் பத்தனையும் இந்நூலும் (5)சார்பெழுத்து என்று குறிப்பிடுகிறது. இதனுரை குற்றியலுகரம் முப்பத்தாறு, குற்றியலிகரம் முப்பத்தேழு, உயிரளபெடை இருபத்தொன்று, ஒற்றளபெடை நாற்பத்திரண்டு என்பன போன்று சார்பெழுத்தின் விரியினையும் குறிப்பிடுகின்றது. இக்கருத்தும் நன்னூலுடையதே (61)

ஒலி, வரி ஆகிய இரு வடிவிலும் முதலெழுத்துக்களினின்று வேறுபடுதல், முதலெழுத்துக்களைச் சார்ந்து வருதல் எனும் இரு இயல்புகளையும் சார்பெழுத்தை வரையறுக்கும் அளவுகோலாக

இந்நூலுரையில் குறிப்பிடுகிறது. இந்த அளவுகோல் மயிலைநாதர் உள்ளிட்ட உரைகாரர்களைப் பின்பற்றியதாகும்.

தொடர்களில் அமையும் சொற்புணர்ச்சி பற்றிய கருத்துக்களை ஆசிரியர் விகாரம் என்று சுட்டுகிறார். இவ்விகாரம் திரிபு, அழிவு, ஆக்கம், திரட்டு என நால்வகைப்படும் (21) இவற்றுள் திரட்டுஎன்பது வடமொழியின் சங்கீர்தமாகும். இருஎழுத்துக்கள் புணர்ச்சியில் ஒரேஎழுத்தாக ஒன்றி (merged)ஒழிப்பது சங்கீரதம். வேத + ஆகமம் > வேதாகமம், சுயம்பூ + உபதேசம்>சுயம்பூபதேசம், நர + இந்திரன் > நரேந்திரன் என்பன இதற்குச் சான்று, குளம் + ஆம்பல் > குளாம்பல், மரம் + அடி > மராடி என்பன போன்ற அமைப்புகள் தமிழிலும் வழங்குதல் பற்றி முனிவர் சங்கீர்தத்தினையும் சேர்த்துள்ளார்.

நன்னூலில்கூறப்பட்டுள்ள சொற்புணர்ச்சிக்கருத்துக்களுள் பெரும்பான்மையும் நூற்பாவிலும் உரையிலும் தரப்பட்டுள்ளன. எனினும் கருத்துக்கள் விகாரம் எனும் பகுதியில் சீராகத் தொகுக்கப் பெறாமல் ஏனைய பகுதிகளிலும் சிதறிக் காணப்படுகின்றன. சான்றாக, குற்றியலுகரத்தின் இலக்கணம் கூறப்பட்ட நூற்பாவில் அதன் புணர்ச்சிச் செய்கையும் சுட்டு, வினாப் பெயர்களின் புணர்ச்சி வேற்றுமை இலக்கணம் கூறும் பகுதியிலும் (65) பெயர் இலக்கணப் பகுதியிலும் (101) கூறப்பட்டிருத்தலைக் குறிப்பிடலாம். ஓர் இலக்கணக் கூற்றை இயம்பும் போது அதன் அமைப்போடு செய்கை போன்ற செய்திகளையும் ஒருங்கிணைத்தல் எனும் எண்ணத்தினால் ஆசிரியர் இவ்வாறு சிதறியிருக்கிறார் போலும் !

**சொல்லிலக்கணம்**

சொல்லிலக்கணம் சொற்பொதுவியல், பெயரியல், வினைச்சொல்லியல். இடைச்சொல்லியல், உரிச்சொல்லியல் என்று ஐந்தாகப் பகுத்து, நூற்றிரண்டு (41–142) நூற்பாக்களில் விளக்கப்படுகிறது. சொற்பொதுவியலில் சொற்களின் பொது இயல்புகள் கூறப்படுகின்றன. இயற்சொல், திரிசொல், ஒருமொழி, தொடர்மொழி, பொதுமொழி, பகாப்பதம், பகுபதம், ஆகுபெயர், திணை, பால், மூவிடம், சாரியை பற்றிய செய்திகள் இங்குத் தரப்படுகின்றன. இவை பன்னிரண்டையும் தொன்னூல்விளக்கம் (42) பெயர், வினை, இடை, உரி எனும் நால்வகைச் சொற்

களுக்கும் பொதுவாக உரிமையுடைய தகுதிகள் என்று கூறுகிறது. இவற்றுள் ஆகுபெயர் பெயர்க்கு மட்டுமே உரிமை உடையது. திணை. பால், மூவிடம், சாரியை என்பன உரிச்சொற்குப் பொருந்தா. இவ்வியற் செய்திகள் யாவும் முந்தை நூற்களில் பொதுவியல் அல்லது எச்சவியல், பதவியல், பெயரியல், வேற்றுமை மயங்கியல் என்னும் இயல்களில் இடம்பெற்றுள்ளன.

சொற்பொதுவியல்

பதம் குறித்த கருத்துக்கள் சொற்பொதுவியல், பெயரியல், வினையியல் எனும் மூன்றிலும் இடம்பெற்றுள்ளன. பகுபதம், பகாப்பதங்களின் இலக்கணம் நால்வகைச் சொற்களுக்கும் பொதுவாதலில் இங்குக்கூறப்படுகின்றன.பெயர்ப்பகுபதத்தின் உறுப்புக்களாகிய பகுதி, கால ஏதிர்மறை இடைநிலை, விகுதி என்பன வினையியலிலும் கூறப்படுகின்றன. இத்தகைய விளக்குமுறை ஒவ்வொரு வகைச் சொல்லையும் பகுத்து விளக்குகின்ற இக்கால மொழியியலாருக்கு ஏற்புடையது. எனினும் இந்நூலில், எழுத்தே தனித்தும் தொடர்ந்தும் பொருள்தரின் பதமாம்' என்று நன்னூல் (128) குறிப்பிடும் அரிய விளக்கம் இடம்பெறவில்லை

இடைச் சொல்லிலும் உரிச்சொல்லிலும் பிறக்கு, மன்னோ மாதோ, வாழிய (தொன்137), கறுப்பு, சிவப்பு, பையுள், சிறுமை (உரை 138) போன்ற பகுபதங்கள் இருப்பினும் இந்நூல் (46) இவ்விரு வகைச் சொற்களையும் பகாப்பதங்கள் என்று கூறுவது ஏற்புடையதன்று. இவ்வாறேசெம்மை. சிறுமை போன்ற மைவிகுதிப் பண்புப் பெயர்களைப் பகாப்பதம் (பகுதி) என்று உரைப்பதுமாகும். இவ்வகைப் பண்புப் பெயர்களை இந்நூல் (உரை 83) விகாரப் பகுதிஎன்று சுட்டுகிறது. பாசிலை, வெற்றிலை, சேதாம்பல், பைங்கிளிபோன்ற பண்புத்தொகைத் தொடர்களில்பசுமை, வெறுமை, செம்மை போன்றவை பல்வேறு ஒலிமாற்றங்களுக்கு உட்படுகின்றன என்று கருதுவதே (92) இதன்காரணம். இவையும் நன்னூலை (131, 135) ஒட்டிய கருத்துக்களே.

சாரியைகளை முந்தைய நூல்கள் எழுத்ததிகாரத்தில் புணர்ச்சியைக் கூறுமிடத்து விவரிக்கின்றன. அவை புணர்ச்சியில் தோன்றும் வடிவங்கள் என்ற நிலையில் சாரியைகளைக் கருதுகின்றன. ஆனால்இந்நூல் (52)சொல்லதிகாரத்தில் கூறியதன்வழி, முந்தை நூல்களைவிடவும் இச்சொற்களுக்குச் சிறப்பு அளித்துள்ளது.

இதன், 'சாரியையென்ப சார்பதம்' என்னும்விளக்கம் மொழியிய லாரின் சார் உருபன் (bound morpheme) என்பதற்கு இணையான தாகும்.

மூவிடப்பெயர்களைச் சுட்டும் நூற்பா (51) தான், தாம்என்ப வற்றைமுறையேஒருமையிலும்பன்மையிலும்வழங்கும்படர்க்கைப் பெயர்கள் எனக் குறிப்பிடுகிறது. ஆனால் அதன் உரை அவன்; அவள், அவர்கள் என்பவற்றைப் படர்க்கைக்குச் சான்று காட்டு கிறது. தான், தாம் பற்றியகுறிப்பு உரையில்இலலை. தான், தாம் எனும்படர்க்கைப் பெயர்கள்மறைந்து, அது,அவன், அவள், அவர் கள், அவை எனும் சுட்டுப்பெயர்கள் படர்க்கையில் வழங்கியமை யால், ஆசிரியர் இவ்வாறு சான்று காட்டுகின்றார். அவர் இயற் றிய செந்தமிழ் இலக்கணம் எனும் நூலிலும் சுட்டுப் பெயர்களே படர்க்கைக்குச்சான்றாகத் தரப்பட்டுள்ளன. இக்கால மொழியிய லில்தான், தாம், என்பன படர்க்கைப் பெயராக வழங்காமல், தற் சுட்டுப் பெயர்களாகவும் (reflexive pronoun) அழுத்தப்பொருளு டைய இடைச்சொல்லாகவும் வழங்குகின்றன. அப்பெயர்களைப் பெயரியலில் கூறுவதே ஏற்புடையது.

பெயரியல்

பெயரியற் செய்திகள் புதிய முறையில் தொகுத்து வகைப் படுத்தப்பட்டுள்ளன. இம்முறை முந்தை இலக்கண நூல்களின் நெறிப்படியோ மொழியியலார் நெறிப்படியோ அமையவில்லை. பெயர்ச் சொல்லின் வரையறை (definition), வேற்றுமையின் வரையறை. முதலேழு வேற்றுமைகளின் செய்தி, சுட்டுப்பெயர், வினாப் பெயர், எல்லாம், எல்லீரும், எல்லாரும் எனும் முழுமைப் பெயர்கள் ஆ,மா,கோ எனும் பெயர்கள், மூவிடப் பெயர்கள் ஆகியவற்றின் உருபு புணர்ச்சி, விளி வேற்றுமைச் செய்தி, பலர் பால் விகுதி, பலவின் பால் விகுதி, ஒருமை பன்மை மயங்கும் தொடரமைப்பு என்பன கூறப்படுகின்றன. தொடர்ந்து, பெயர்ச்சொல்லின் அமைப்பு (பகுதி, விகுதி, இடைநிலை), வட மொழிப் பெயர்ச் சொற்கள் சிலவற்றின் அமைப்பு, வடமொழி எதிர்மறை முன்னொட்டு (அ, அந்) ஆகியன சொல்லப்படுகின் றன. பின்னர், வேற்றுமை, வினை, பண்பு, உவமம், உம்மை, அன்மொழி எனும் பெயர்த்தொகைத் தொடர்கள், அடை, சினை, முதல் எனும் மூன்றும் வரும் தொடரமைப்பு, எண்ணுப்

பெயர்களின் சார் உருபுகள் – எண்ணுப் பெயர்களால் அமையும் தொகைத் தொடர்கள் (எண்ணுப் பெயர்ப் புணர்ச்சி), அளவுப் பெயர், திசைப் பெயர்களின் புணர்ச்சி எனும் செய்திகள் விவ ரிக்கப்படுகின்றன. இறுதியாக, சுட்டு, வினாப் பெயர்களின் அமைப்பைச் சுட்டி, அவற்றின் அடிச்சொற்களின் புணர்ச்சி சுருக்கமாகத் தரப்படுகிறது.

விளிவேற்றுமை உருபு புணர்ச்சிக்கு உரியதன்றால், ஏழாம் வேற்றுமையை அடுத்துச் சுட்டுப் பெயர் போன்ற சில பெயர் களின் உருபு புணர்ச்சி செய்திகள் இந்நூலில் கூறப்பட்டுள்ளன. உருபு புணர்ச்சி உள்ளிட்ட புணர்ச்சிச் செய்திகள் எழுத்ததிகாரத் திலும் தொகைத் தொடர்கள் எச்சவியல் அல்லது பொதுவியலி லும் பிற நூல்களில் விவரிக்கப்பட்டுள்ளன.

ஆனவன், என்பவன் போன்றவற்றை எழுவாய் வேற்றுமை யின் சொல்லுருபுகள் என்று ஆசிரியர் (உரை 56) கூறுகிறார். கொற்றனானவன், கொற்றியானவள், கொற்றரானவர், கோவா னது, கோக்களானவை, சாத்தனென்பவன் என்பவற்றிலுள்ள ஆனவன் முதலியன இணைப்புச் சொற்களே அன்றி உருபு களல்ல. இவை ஆகு, என்–எனும் வினையடியாக அமைந்தவை. வடமொழி அமைப்பைத் தமிழில் இணைக்கும் முயற்சி இது எனலாம்.

தொன்னூல் விளக்கம் (58) ஆல், ஆன், ஒடு, ஓடு எனும் உருபுகள் கருவி, கருத்தா உடனிகழ்வு ஆகிய பொருளில் வரும் என்று மூன்றாம் வேற்றுமையை விளக்குகிறது அதனுரை ஆல், ஆன், கருவி, கருத்தாவோடு, காரணம், தொறு, சினை ஆகியபொரு ளிலும் ஒடு, ஓடு உருபுகள் உடனிகழ்வுப் பொருளிலும் வரும் என வரையறுக்கிறது. மேலும், ஆல், ஆனுக்குப் பதிலாகக் கொண்டு என்பதும் ஒடு, ஓடு என்பவற்றிற்குப் பதில் உடன் என்பதும் சொல்லுறுபாகவருதலையும் உரை குறிப்பிடுகிறது. தொறும்என் பதே, இங்குத் தொறு எனச் சுட்டப்பட்டுள்ளது,

| | | |
|---|---|---|
| 1. ஊராலோராலயம் | — | தொறும் |
| 2. கண்ணாற் குருடன் | — | சினைப்பொருள் |
| 3. காலால் முடவன் | | |

ஆசிரியர் தரும் சான்றுகளில் (2, 3,) ஆல் என்பது காரணப் பொருளில் வருகிறது; கண், கால் என்பனவே சினைப் பொருள். ஒடு என்பது ஒடுஉருபின் நீட்சியாகவும், ஆன் என்பது ஆல் உருபின் பிறழ்பிரிப்பு வடிவமாகவும் உள்ளன.

கொண்டு, உடன் என்பன பிற்காலமொழி வளர்ச்சியாகும். இக்காலத்தில் இவற்றுடன் – ஐக்கொண்டு, வெச்சி, எவெச்சி, கூட எனும் வடிவங்களும் வழக்குகின்றன.

கத்தி கொண்டு வெட்டினான்
கத்தியைக் கொண்டு வெட்டினான்
கத்தி வெச்சி வெட்டினான்
கத்தியை வெச்சி வெட்டினான்
அவனுடன் போனான்
அவன் கூடப் போனான்

வைத்து என்னும் சொல் வெச்சி என்று மாற்றம் பெற்றுள்ளது.

ஐந்தாம் வேற்றுமைப் பொருளில் இல், இன் என்பவற்றோடு உம் என்பது சேர்ந்து உருபாக வருதலையும், ஐக்காட்டிலும், ஐப் பாக்கிலும், நின்று(ம்), இருத்து(ம்) என்பன முறையே எல்லை நீங்கல் பொருளில் சொல்லுருபுகளாக வருதலையும் இந்நூல் உரையில் (60) குறிப்பிடுகிறது.

1. அவனைக் காட்டிலும் வல்லவனிவன்
2. இவனைப் பார்க்கினு மூடனவன்
3. ஊரினின்று நீங்கினான்
4. ஊரிலிருந்து போனான்

இச்சான்றுகளில் (1,2) ஒப்புப் பொருள் அமைந்துளதேயன்றி, எல்லைப் பொருள் இல்லை. இக்காலத்திலும் இச்சொல்லுருபுகள் ஒப்புப்பொருளிலேயே வழங்குகின்றன.

உடைய எனும் சொல்லுருபும் (சாத்தனுடைய மகன்) கு எனும் நான்கனுருபும் (சாத்தனுக்கு மகன்) ஆறாம் வேற்றுமை உடைமைப் பொருளில் வரும். 'ஒரோவிடத்து அவனது மனையாள், அவனது தோழன், என உயர்திணையில் அதுவுருபும் வரும் (உரை 61).

இங்குச் சுட்டப்பட்டுள்ள சான்றில் குவ்வுருபு நான்காம் வேற்றுமை முறைப் பொருளில் வருகிறது. ஒரோவிடத்து அதுவுருபும் உயர்திணையில் வரும் என்றமையால், பெரும் பான்மையும் வராது; பிற உருபு வரும் என்பது புலனாகின்றது. ஆனால் ஆசிரியர் அவ்வுருபு இன்னது எனச் சுட்டவில்லை. அது உருபும் அஃறிணைப் படர்க்கை ஒன்றன்பால் விகுதி. அதுவும் ஒருருவவுருபனாக இருத்தல் பற்றி, இவ்வுருபு அஃறிணை ஒருமைக்கே உரியது எனக் கருதிப் பவணந்தி முதலியோர் இலக்கணம் செய்தனர். ஆனால் தொல்காப்பியத்திலோ இலக்கியங்களிலோ இவ்வரையறை காணப்படவில்லை; அது எனும் உருபு இருதிணையிலும் எண் வரையறையின்றி வழங்குகிறது. இக்கால வழக்கிலும் வரையறை காணப்படவில்லை. எனவே தொன்னூல் விளக்கத்தின் இக்கருத்து மொழி வழக்கிற்கு அப்பாற்பட்டதாகும்.

இந்நூலில் (உரை 62) இடம்பெற்றுள்ள உழி, உளி எனும் ஏழாம் வேற்றுமை உருபுகள் இரண்டும் ளகர ழகரங்களின் இணைவால் அமைந்தவையாகும். உள் என்பதனடியாகப் பிறந்த இவை உள்+இ>உளி>உழி என அமைந்துள்ளன. ழகர ளகர இணைவு பிற்காலத்தில் தமிழ் ஒலியியல்புகளுள் ஒன்றாகும் (பவளம், பவழம், கொளுநன், கொழுநன்)

இந்நூலும் (69) நன்னூல், இலக்கண விளக்கம் போன்றவற்றைத் தழுவி, விளிக்கும்போது பெயர்ச்சொற்களில் அமையும் திரிபு குன்றல், மிகுதல்போன்ற வடிவமாற்றங்களை விளிவேற்றுமையின் உருபுகள் என்று கூறுகிறது. ஆனால் தொல்காப்பியம் இவ்வாறு கூறவில்லை.

தொன்னூல் விளக்கம் (85) பெயர்ப் பகுபதங்களில் ந், ஞ் என்பனவும், த். ச் என்பனவும் இடைநிலைகளாக அமைதலை நூற்பா, உரைவழிக் குறிப்பிடுகிறது.

கிளைநர், இளைநர், கிளைஞர், இளைஞர்,
வண்ணாத்தி, வலைச்சி

இங்கு ந், ஞ் எனுமிரண்டும் உறழ்ச்சியில் வருகின்றன. தகர இடைநிலை அண்ணவினமாகிச் சகரமாக (வலைத்தி>வலைச்சி, புலைத்தி>புலைச்சி) என மாறியுளது.

தொகைகுறித்த வீரமாமுனிவரின்கருத்து இந்நூலில்தெளிவாகக் காணப்படுகிறது.

தொகைநிலை யென்ப தொடரும் பெயரொடு
வினைபெயர் புணர்புளி வேற்றுமை முதலொழித்
தொருமொழி போற்பல வொன்றிய நெறியே (தொன்88)

பெயருடனே பெயரும், பெயருடனே வினையும், புணருமிடத்து வேற்றுமை முதலிய வுருபுகள் தோன்றாதொழிய நிற்ப இரண்டு சொற்,பல சொற்றொடர்ந்த தன்மையால் ஒரு பெயர்ச் சொற் போலவும் ஒரு வினைச் சொற்போலவும் வழங்குவன தொகைநிலைத் தொடர் மொழிகளாம். (உரை)

பல சொற்கள் சேர்ந்து இடையில் சொற்களோ உருபுகளோ மறைந்து, ஒரு சொல் போன்ற உணர்வைத் தோற்றுவிப்பன தொகைச் சொற்களாகும் என்று முனிவர் கருதுகிறார்

இந்நூலில் (80) இருவகை அஃறிணைப் பன்மை விகுதிகள் கூறப்படுகின்றன. து எனும் விகுதி ஏற்கும் ஒருமைப் பெயர்கள் பன்மையில் அ, ன, ஐ என்பவற்றையும், ஏனைய பெயர்கள் கள் என்பதனையும் பன்மை விகுதிகளாக ஏற்கும்.

அரிது — அரிய, அரியன, அரியவை
உளது — உள, உள்ளன, உள்ளவை
நிலம், நரி — நிலங்கள், நரிகள்

இங்குச் சுட்டப்படும் ன எனபதில் அகரமே பன்மை விகுதியாகும். இதிலுள்ள னகரவொற்று அன் சாரியையின் உறுப்பாகும். முனிவர் சாரியையின் உறுப்பை விகுதியோடு சேர்த்துப் பிறழப் பிரித்துள்ளார்,

---



# தொல்காப்பியப் புறத்திணை வளர்ச்சி

(டாக்டர் கி. இராசா
தமிழியல்துறை.
பாரதிதாசன் பல்கலைக்கழகம்
திருச்சிராப்பள்ளி)

தொல்காப்பியர் வகுத்துள்ள புறத்திணைகளை, மறத்தைத் தலைமைக் கருத்தாகக் கொண்டு பாடுவன என்றும், மறத்துடன் அறத்தை இணைத்துப் பாடுவன என்றும் இரு பிரிவுகளாகக் காணலாம். வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை முதலிய திணைகள் மறத்தைச் சிறப்பித்துப் பாடுகின்றன. வாகை,காஞ்சி, பாடாண் திணைகள் மறத்தையும் அறத்தையும் விரவிப் பாடுகின்றன. காஞ்சித்திணையில் மறத்தைப் போற்றும் விழுப்ப வகையால் பத்துத் துறைகளும், நிலையாமையை நினைவூட்டும் விழும வகையால் பத்துத் துறைகளும் இயன்றுள்ளன பாடாண் திணையின் இருபது துறைகளுள் பதினான்கு துறையில் அறக் கருத்துக்கள் வலியுறுத்தப்படுகின்றன.

## தொடக்கநிலை

வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை முதலிய திணைகள் களமுறையை அடிப்படையாகக் கொண்டு அமைவன; அமர்க்களச் சூழலில் தோன்றுவன. புறத்திணையியலின் தொடக்கத் திணையாக உள்ள வெட்சித் திணையில் போர் முறைகளின் பொது இயல்புகளைச் சொல் மாற்றங்களுடன் பிற திணைகளுக்கும் தொல்காப்பியர் இயைபுபடுத்திக் காட்டியுள்ளார்.

## சான்று

படை இயங்கு அரவம் (வெட்சி) = இயங்குபடை அரவம் (வஞ்சி)

ஆகோள் (வெட்சி) = அடுத்து ஊர்ந்து அட்ட கொற்றம் பொருள் இன்று உய்த்த பேராண் பக்கம் (வஞ்சி)

மேலும் புறநானூற்றில் இடம் பெற்றுள்ள வெட்சி, கரந்தை, நொச்சி, தும்பத்திணைப் பாடல்கள் பாட்டுடைத் தலைவர்களைச் சுட்டாமல் பொது நோக்கிலேயே பாடப்பட்டுள்ளன. இப்பாடல்கள் அடிவரையறை குறைந்து காணப்படுகின்றன. வெட்சி, கரந்தை, நொச்சி, தும்பைத்திணைப் பாடல்கள் புறநானூற்றுள் மிகப் பழமையானவை எனக் கருதுவர். இவ்வாறு பிற திணைகளின் துறைகளுக்கு வெட்சித் திணையின் துறைகள் தோற்றுவாய் செய்துள்ளமையை அறியலாம்.

**திருப்புமுனை**

புறத்திணைகளின் வளர்ச்சியில் வெட்சித்திணை திருப்புமுனையாக அமைந்துள்ளது. மன்னனது வெற்றியை மட்டுமின்றிச் சமுதாயத்தின் பல்வேறு பிரிவினரும் தத்தம் துறைகளில் எய்தும் வெற்றியை வாகைத் திணையின் துறைகள் சுட்டுகின்றன. பெருமன்னர்தம் வெற்றிச் சிறப்பை எடுத்துக்காட்டும் அரசவாகைப் பாடல்களில், அவர்தம் வேள்விச் சிறப்பும் (புற. 26 : 15), அந்தணர்க்கும் புலவர்க்கும் அவர்கள் அளித்த கொடைச்சிறப்பும் (புற. 22, 3[illegible]), அருட்சிறப்பும் (புற 4[illegible]) புலனாகின்றன. நாட்டின் வளம் பாராட்டும் கூறுகளும் (புற. 17:10-[illegible]) மன்னனின் நலம் போற்றும் கூறுகளும் (43:8-12) இவரது வாகைப் பாடல்களில் காணப்படுவதால் இவை நீண்டு காணப்படுகின்றன. புறநானூற்றில் உள்ள முப்பத்தைந்து அரசவாகைப் பாடல்கள் பின்வருமாறு அடியளவைக் கொண்டுள்ளன.

| வ.எண் | பாடல் எண் | பாடல் எண்ணிக்கை | அடியளவு (வரிகள்) |
|---|---|---|---|
| 1. | புற. 20; 22 – 3, 33, 42 43, 168, 174 | 8 | 21 - [illegible]0 |
| 2. | புற. 19, 21, 25 – 6, 31, 37, 44, 51 – 4, 61, 76 - 8, 93, 98 - 100, 125, 161, | 21 | 11 - 20 |
| 3. | புற. 66, 79, 81 - 2, 94, 104. | 6 | 5 - 10 |

அரசவைவாகைப் பாடல்கள் முடியுடை மூவேந்தரின் வெற்றிச் சிறப்பையும் கொடை மாண்பையும் பாடுகின்றன. இவற்றுள் ஏழு பாடல்கள் பாட்டுடைத் தலைவர் நோக்கில் விதி விலக்காக அமைந்துள்ளன. (புற. 125, 93-100, 104).

வாகைத்திணையின் துறைகள் சமுதாயத்தின் பல்வேறு பிரிவினரும் தத்தம் துறைகளில் எய்தும் வெற்றி பற்றிக் குறிக்கின்றன; வாகைத்திணைப் பாடல்களில் புலவர்களின் பரிசில் நாடும் போக்கும், மன்னரை நாடிய நோக்கும் காட்டப்படுகின்றன. மன்னரை அறநெறியின்பால் ஆற்றுப்படுத்தும் இயல்பும், நாட்டு வளம் பாராட்டும் கூறுகளும், மன்னன் நலம் போற்றும் கூறுகளும் இடம் பெற்றுள்ளன. வேந்தரைப் பாடும் அரசவாகைப் பாடல்கள், வாகைத்திணையில் தலைமை ஏற்றுள்ளன. இத்தகு பண்புகளால் இவ்வாகைத் திணைப்பாடல்கள், தனி மறம் பாடுகின்ற வெட்சி, அறம் சேர்த்துப் பாடுகின்ற வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை முதலிய திணைக் கருத்துக்கள் மறத்தோடு அறம் சேர்த்துப் பாடுகின்ற வாகைத்திணையாக வளர்ச்சி பெறுகின்றன. மேலும் அறத்தைப் போற்றுகின்ற காஞ்சி, பாடாண் எனும் திணைகளின் வளர்ச்சிக்கு வழிவகுக்கும் திருப்புமையமாகவும் வாகைத்திணை விளங்கக் காணலாம்.

### அறத்திணைகளின் ஆட்சி

புறநானூற்றுள் முப்பது துறைகள், அமர்க்களச் சூழலில் பாடப்பட்ட பாடல்களைக் கொண்டுள்ளன. இவற்றுள் வெட்சி, தும்பை, கரந்தை, வஞ்சி, நொச்சி எனும் திணைகளில் மறத்துறைகள் பேரிடம் பெற்றுள்ளன. அமர்க்களச் சூழலில் நிலையாமையைச் சுட்டும் காஞ்சித்திணை நான்கு மறத்துறைகளையும் (காடு வாழ்த்து, பேய்க்காஞ்சி, மகட்பாற் காஞ்சி, மகண் மறுத்தல்), அறத்துறைகளின் தோற்றத்துக்கு வழி வகுத்த வாகைத்திணை ஐந்து மறத்துறைகளையும் (ஏர்க்கள உருவகம், ஏறாண் முல்லை. மறக்கள வேள்வி, மூதின்முல்லை, வல்லாண் முல்லை) பெற்றுள்ளன. அறத்துறைகளின் ஆட்சி மேலோங்கிக் காணப்படும் பாடாண்திணை குடைமங்கலம், பாடாண்பாட்டு எனும் இரு மறத்துறைகளைப் பெற்றுள்ளது.

அமர்க்களத்தை விடுத்து, அவைக்களச் சூழலில் பாடப் பெற்றவனாகப் புறநானூற்றில் இருபத்திரண்டு துறைகளைக் காணலாம். இவற்றுள் இக்கருத்துக்கள் மேலோங்கிய பாடாண் திணையின் துறைகள் தலைமை வகிக்கின்றன இப்பாடாண் திணை பதினான்கு அறத்துறைகளைப் பெற்றுள்ளது (கொடுப் போர் ஏத்திக்கொடாஅர்ப் பழித்தல், இயன்மொழி வாழ்த்து, வாயுறை வாழ்த்து, செவியறிவுறூஉ, கடைநிலை, கண்படை நிலை, வேள்விநிலை, புறநிலை வாழ்த்து, கைக்கிளைவகை, துயிலெடைநிலை, ஆற்றிடைக்காட்சி, பெருமங்கலம், குடை நிழல் மரபு, கடைக்கூட்டு நிலை, இருவகைவிடை, ஓம்படை). நிலையாமையை வலியுறுத்தும் காஞ்சித்திணை ஐந்து அறத் துறைகளையும் (தாபதநிலை, பூக்கோட்காஞ்சி, பெருங்காஞ்சி, முதுமொழிக்காஞ்சி, பொருண்மொழிக் காஞ்சி), வாகைத்திணை இரு அறத்துறைகளையும் (தாபதவாகை, பார்ப்பனவாகை), பெருந்திணை ஒரு துறையையும் (குறுங்கலி பெற்றுள்ளன.)

மேற்சுட்டியவாறு அமர்க்களச் சூழலில் மறக்கருத்துக்களும், அவைக்களச் சூழலில் அறக் கருத்துக்களும் தலைமையேற்றுள்ள மையை அறியலாம். உலக இலக்கியங்களில் மறப்பண்பின் வீழ்ச் சிக்குப் பின் அறப்பண்பு தலைமை தாங்குவதைக் குறித்துள்ள னர். உலக இலக்கியங்களில் காணப்படும் இப்பொது நீர்மைக் கேற்பத் தமிழிலும் வீரநிலைக் காலத்துக்குப்பின் அறநெறிக் காலம் உருவானது. இவ்வாறு அறநெறிக்காலம் உருவானதற்குப் பாடுகளம், அமர்க்களத்திலிருந்து அவைக்களத்திற்கு மாறும் போது, களச்சூழலுக்கேற்ப அறநெறிவகைமைகள் (அறப்பாடல் கள்) செல்வாக்குப் பெற்றன. அறநெறி வகைமைகளின் இச் செல்வாக்கு, பதிற்றுப்பத்தில் 'பாடாண்பாடல்' எனும் வகை யாக வளர்ச்சி பெற்றது.

முடியுடை மூவேந்தரைப் பாடுகின்ற புறநானூற்றுப் பாடல்களைத் திணை அடிப்படையில் நோக்கும்போதும் அவற் றுள் பாடண்திணைப் பாடல்களே தலைமையேற்கக் காணலாம். இச்சான்று மூவேந்தரைப் பாடும் நிலையிலும் பாடாண் பாடல் களின் தலைமையைச் சுட்டுவதாகும். இதனைப் பின்வரும் அட்டவணை விளக்கும்.

| வரிசை எண் | திணைகள் | வேந்தர் | | |
|---|---|---|---|---|
| | | சேரர் | சோழர் | பாண்டியர் |
| 01. | பாடாண் | 14 | 29 | 13 |
| 02. | வாகை | 7 | 11 | 13 |
| 03. | காஞ்சி | -- | 1 | 2 |
| 04. | வஞ்சி | -- | 10 | 1 |
| 05. | தும்பை | 2 | 3 | -- |
| 06. | பொதுவியல் | 4 | 17 | 8 |
| 07. | கைக்கிளை | -- | 3 | — |
| | மொத்தம் | 27 | 74 | 37 |

இதுகாறும் காட்டிய சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு தொல்காப்பியப் புறத்திணை இலக்கணத்தின் வளர்ச்சியைப் பின்வருமாறு கணிக்க இயலும்:

தொல்காப்பியர் வகுத்துள்ள வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை முதலிய திணைகள் களமுறைகளை அடிப்படையாகக் கொண்டு அமைவன; அமர்க்களச் சூழலில் தோன்றுவன. எனவே இவற்றுள் மறக்கருத்துக்கள் தலைமை பெற்றுள்ளன. வாகையின் செம்பாதித் துறைகளில் அறக்கருத்துக்கள் ஆட்சி செய்கின்றன. காஞ்சி, பாடாண் முதலிய திணைகளில் அறக்கருத்துக்கள் தலைமைஏற்றுள்ளன. இவற்றுள் புறத்திணையியலின் போக்கை அறத்தின் பாற்படுத்தும், 'திருப்புமுனை' யாக வாகைத்திணை திகழ்கிறது.

# சிறுபொழுது

சி. கணேசையர்

அகப்பொருள் விளக்க நூலாசிரியராகிய நாற்கவிராசநம்பி யென்பவர் ''மாலை யாமம் வைகறை யெற்படு, காலை வெம் பகல் காயுநண் பகலெனக், கைவகைச் சிறுபொழு தைவகைத் தாகும்'' என்றார். தொல்காப்பிய உரையாசிரியர்களுள் இளம் பூரணரும், நச்சினார்க்கினியரும் ''வைகறை விடியல் மருதம்'' என்னுஞ் சூத்திரத்திற்கு வைகறையும் விடியலும் எனப் பொருள் கொண்டு சிறுபொழுது ஆறு என்றார்கள். இவ்விரு கூற்றுள் எது பொருத்தமுடைத்தென்பதே ஈண்டு நாம் ஆராய்தற்குரியது.

பொருளிலக்கணம் பெரும்பாலும் வழக்கியல்தழுவியே செய்யப் பட்டதாகலின் அவ்வழக்கியல்கொண்டு இவ்வழக்கறுப் பதே தகுதியாகும். பெரும்பொழுது எப்படி ஆறாகவகுக்கப் பட்டு வழங்கிவருகின்றதோ அப்படியே சிறுபொழுதும் ஆறாக வகுக்கப்பட்டு வழங்கி வருவது யாவரு மறிந்ததொன்றாம். ஓராண்டின் முற்பாதியாகிய உத்தராயணத்தை மூன்றாகவும் பிற்பாதியாகிய தக்கிணாயனத்தை மூன்றாகவும் வகுத்து வழங்கு வதுபோலவே, ஒருநாளின் முற்பாதியாகிய பகலை மூன்றாக வும், பிற்பாதியாகிய இரவை மூன்றாகவும் வகுத்து வழங்குப. வர். பகல் முற்பகல், நடுப்பகல், பிற்பகல் என வகுக்கப்படும். அவ்வாறு வழங்குவதை, ''முற்பகற்செய்யிற் பிற்பகல்விளையும்'' எனவும் ''பிறர்க்கின்னா முற்பகற் செய்யிற் பிற்பகற் றாமே வரும்'' எனவும. ''நடுப்பகல் மத்தியானம்'' எனவும், ''நடுவு நிலைத் திணையே நண்பகல் வேனிலொடு'' எனவும், இடை யிருள் யாமத்திட்டுநீக் கியது'' (சிலப்) எனவும், ''நடுநாள்யாமம்'' (கந்தபு) எனவும். ''கடைக்கங்குல்'' (பட்டினப்) எனவும் வருவன வற்றான் அறிக. (முதல்யாமம் வந்தவழிக் கண்டுகொள்க).

இதுபற்றியே இளம்பூரணரும், மாலையாவது இராப் பொழுதின் முற்கூறென்றும், வைகறையாவது இராப்பொழுதின் பிற்கூறென்றும், விடியலாவது பகற்பொழுதின் முற்கூறென்றும்

எற்பாடாவது பகற்பொழுதின் பிற்கூறென்றும், நண்பகலாவது பகற்பொழுதின் நடுக் கூறென்றும் உரைத்தனர். இன்னும் தமிழ் நாட்டிலுள்ள கோயில்களிலே பூசைசெய்யுங்காலம் ஆறாக வகுக்கப்பட்டு வழங்குதலானும் அது துணியப்படும்.

இங்ஙனம் வழக்கியலோடொத்துவருதலின் சிறுபொழுதும் ஆறெனக்கொள்ளலே பொருத்தமாம். இச் சிறுபொழுதாறனுள் ஒவ்வொன்றும், ஒருநாளுக்குரிய அறுபதுநாழிகையுள், பப்பத்து நாழிகை யுடையதென்பர் நச்சினார்க்கினியர். அவ்வகுப்பை நாம் உற்றுநோக்கும் போது அது மிகப் பொருத்தமாகவே காணப் படுகின்றது. ஏனெனின் பகற் பத்துநாழிகைதொடங்கி இருபது நாழிகைவரையும் இடையாமமும் கொள்ளநிற்றலின்; சிறுபொழு தைந்தெனக்கொள்வார்க்கு இவ்வரையறை பொருந்தாமையு முணர்ந்துகொள்க.

இன்னும், பத்துநாழிகைக்குப்பின் வெயின்முதிர்தல் அநு பவத்தானும் உணரக்கிடத்தலின் நடுப்பகல் பத்துநாழிகையின் பின் தொடங்கி இருபதுநாழிகை முடியும்வரையு முள்ளகாலமே என்பது துணிபாதலானும் சிறுபொழு தாறென்றலே பொருத்த மாதல் காண்க.

அற்றேல், தொல்காப்பியத்துள் மருதத்திற்கு விதித்த ''வைகறை விடியல்'' என்பதை உம்மைத் தொகையாகக்கொள் ளாதுபண்புத் தொகையாக்கொண்டு வைகறையாகியவிடியலென ஒன்றாகக்கொண்டு பொழு தைந்தென்றா லென்னையெனின், அறியாதுகடாயினாய்; வைகறையும் வேறு; விடியலும் வேறு ஆதலி னிழுக்குண்டு என்பது. வேறு என்பது எற்றாற்பெறு துமெனின், ''வான்கண் விழியா வைகறையாமத்து (சிலப்பதி காரம். நாடு ) எனவும், ''இரவுத்தலை பெயரா வைகறை யாமத்து'' (நற் – கூஎ) எனவும், கடைக்கஙகுல்'' (பட்டினப்-115) எனவும், இரவுத்தீரெல்லை'' (வரி-கா-கூ) எனவும், வருஞ்செய் யுள்களானே வைகறை வேறென்பதூஉம், ''உடைய வாறே நள்ளிரு ளலரி - விரிந்த விடியல் வைகினிர் கழிமின்'' (மலைபடு கடாம் கக்ஷ௩ சு) எனவும், ''விடியல் வெங்கதிர்காயும்'' எனவும், ''ஆயிடை வெஞ்சுடர் தோன்றி விடிந்ததையன்றே'' (சிந்தா) எனவும், ''வான்கண் விரிந்த விடியல்'' மலைபடு (உருஎ)எனவும் வருஞ் செய்யுள்களானே விடியல் என்பதூஉம் அறியக் கிடத்

தலாற் பெறுதுமென்பது. வைகறை — சூரிய உதயத்துக்கு முந்திய காலம். விடியல் — சூரிய உதயந்தொட் டுள்ளகாலம். விடியலைத் தொன்னூல் விளக்கநூலாசிரியர் எற்றோற்றமென்றனர். பரி பாடலிலும் "விடியலங்கியுயர்நிற்க" என்பதற்கு, எற்றோற்ற மென்னும் பொருளமையச் சிங்கராசியிற் சூரியன் நிற்க எனப் பொருள் கூறுவர் பரிமேலழகரும்.

அற்றேல், "விடியல் வெங்கதிர்" என்பதற்கு, விடியற்பின் னர்த்தாகிய வெங்கதிர் என்று பொருள்கொண்டாலென்னை யெனின், அங்ஙனம் நலிந்து பொருள்கோடலாற் போந்தபய னின்றாதலானும், முன்னர்க் காட்டிய "ஆயிடை—வெஞ்சுடர் தோன்றி விடிந்ததையன்றே" என்பது முதலிய செய்யுள்களோடு மாறுபடுதலினாலும், அது பொருந்தாமை தெளியப்படும்.

அற்றேல், குறுந்தொகையினுள், "காலையும் பகலும் கையறு மாலையும், ஊர்துஞ் சியாமமும் விடியலு மென்று" என விடியலை வைகறை என்றே கூறலின், விடியலை வேறாகக் கோடல் பொருந்தாதன்றோ எனின், இருள்புலருங்காலமாதல் பற்றி வைகறையையும் ஒரோவழி விடியல் என்று கூறுவதன்றி விடியல் வைகறையாகாதென்பது நாம் முன்னர்க்காட்டிய உதாரணங்களா னுணர்ந்துகொள்க.

இன்னும், "பரத்தைவயிற்பிரிந்த தலைவன் ஆடலும் பாடலும் கண்டும் கேட்டும் பொழுதுகழிப்பிப் பிறர்க்குப் புலனா காமை மீளுங்கால மதுவாதலானும், தலைவிக்குக் கங்குல்யா மங் கழியாது நெஞ்சழிந்து ஆற்றாமைமிகுதலான் ஊடலுணர்த் தற் கெளிதாவதோர் உபகாரமுடைத்தாகலானும் வைகறையும், தலைவி விடியற்காலம் சிறுவரைத்தாதலின் இதனாற் பெறும் பயனின்றெனத் தெளிந்து வாயிலடைத்து ஊடல்நீட்டிப்பவே அவ் வைகறைவழித்தோன்றிய விடியற்கண்ணும் அவன் மெய் வேறுபாடு விளங்கக்கண்டு வாயில்புகுத்தல்பயத்தலின் விடியலும் கூறினார்" எனவும் கூறுதலானும் அது பொருந்தாதென்பது.

இன்னும், உரையாசிரியரும், "இனி மருதத்திற்கிடன் பழனஞ் சார்ந்தவிடமாதலான் ஆண்டுறைவார் மேன்மக்களா தலின் அவர் பரத்தைவயிற்பிரிவுழி அம்மனையகத்து உறைந் தமை பிறரறியாமல் மறைத்தல்வேண்டி வைகறைக்கண் தம்

மனையகத்துப் பேரும்வழி ஆண்டு மனைவி யூடலுற்றுச் சார்கிலாளாம். ஆதலான் அவை (வைகறையும் விடியலும்) அந்நிலத்துக்குச்சிறந்தன'' எனக்கூறுதலானும் இரண்டும் வேறெனக் கோடலே பொருத்தமாம்.

அற்றேல், நாள்வெயிற்புணர்தன் முறையன்மையின் ஊடல் செல்லாதன்றோ எனின், இது பரத்தைவயிற் பிரிந்து வந்தமையாலான பெருந்துனியாதலிற் செல்லுமென்பது. இது பெருந்துனியென்பது விளக்குதற்கே நச்சினார்க்கினியரும் 'வாயிலடைத்து ஊடல்நீட்டிப்பவே' எனவும், உரையாசிரியரும் 'ஊடலுற்றுச் சார்கிலாளாம்' என்றுங் கூறியதூஉமென்க. ஆதலின் நாள்வெயிற்காலையாகிய விடியலும் ஊடலுக்கு வேண்டிய தொன்றென்பது துணிபேயாமென்க. அற்றேல், கூடலின்றோ வெனின் அவள் ஊடறணிந்து மனமுமொன்றியபின் கூடுவானாதலின் அதன்கணாராய்ச்சியின்றென்பது.

இன்னும், நச்சினார்க்கினியர், ''வீங்குநீர்'' என்னும் **மருதக்கலியுள்,**

> '' அணைமென்றோள் யாம்வாடவமர்துணைப் புணர்ந்துநீ
> மணமனையா யெனவந்த மல்லலின் மாண்பன்றோ
> பொதுக்கொண்ட கௌவையிற் பூவணிப் பொலிந்த நின்
> வதுவையங் கமழ்நாற்றம் வைகறைப் பெற்றதை''

என மருதத்துக்கு, வைகறைவந்தது என்றும்,''விரிகதிர்மண்டிலம்'' என்னும் மருதக்கலியுள்,

> '' தணந்தனை யெனக்கேட்டுத் தவறோரா தெமக்குநின்
> குணங்களைப் பாராட்டுந் தோழன்வந் தீயான்கொல்
> கணங்குழை நல்லவர் கதுப்பற லணைத்துஞ்சி
> யணங்குபோற் கமழுநின் னலர்மார்பு காணிய''

என மருதத்துக் காலைவந்தது எனவுங் கூறுமாற்றானும், அவ்விரு பொழுதும் பழையகாலத்து நூல்வழக்கின்கண்ணும் அமைந்திருத்தல் அறியப்படும். பிற்காட்டிய செய்யுளிற் காலை அமைந்தது எப்படி யறியப்படுமெனின், ''அணங்குபோற் கமழுநின் னலர்மார்பு காணிய'' என்றதனானே விடியற்காலத்துப்பூ முதலிய சூடி அவற்றின் நாற்றச் செவ்விகுலையாமல்வந்தானென்பது பெறப்படுதலின் என்பது. இதனை விளக்குதற்கே நச்சி

னார்க்கினியரும், மருதக்கலியுரையிலே "இதுநாற்றச் செவ்வி குலையாமல் வந்தமைகூறலின் மருதத்து விடியற்காலம் கூறிற்று" என்றும், "இதனால் வைகறைக்காலத்து மனைவயிற்செல்லாது இளைய செவ்வியையுடைய பரத்தையரைப் புணர்ந்து விளையாடி அதனினும் அமையாது, பின்னும், அவரைப்புணர்தற்குச் சூழ்ந்து திரிகின்ற இவ்வூரிடத்தே ........ எனக் காமக்கிழத்தி உள்ளுறைஉவமங்கூறினாள்" என்றும் உரைத்தனர். இன்னும், குறுந்தொகையினுள்வரும்,

"காலை யெழுந்து கடுந்தேர் பண்ணி
வாலிழை மகளிர்க் கழீஇய சென்ற
மல்ல லூரா னெல்லினன் பெரிதென
மறுவருஞ் சிறுவர் தாயே
தெறுவ தம்மவித் திணைப்பிறத் தல்லே"

என்னுஞ் செய்யுளும் மருதத்து விடியல்வந்தது. என்னை? தலைவி பெரிதும் விளக்கமுடையன் என அறியக்கிடந்தது விடியலேயாதலின்; 'எல்லினன் பெரி'தென்பது பிறகுறிப்பென்றார் அந் நூலுரையாசிரியர். அதனானு மறிக. அற்றேல், மருதத்துக்கு இருபொழுது கோடன் மிகையன்றோவெனின், முல்லைக்குக் கார்காலம் ஒன்றேகொண்டு ஏனையவற்றிற்கு இரண்டும் ஆறுங் கோடன் மிகையன்றோவென விடுக்கப்படுமாதலின் அதன்கண் ஆராய்ச்சியின்றென்பது.

அற்றேல், நக்கீரனார் களவியலுரையுள்"வைகறையாமம்" என ஒன்றேகூறியது என்னையோ எனின், அங்ஙனங்கூறியது பரத்தை வயிற்பிரிந்தார் தம்மைப் பிறரறியாமற் றம்மில்லிற்கு வருவது பெரும்பாலும் வைகறையேயாதல்பற்றி என்பது விடியலும் அவர்க் குடன்பா டென்பது, "வைகறைவிடியன் மருதம்" என்னுந் தொல்காப்பியச் சூத்திரத்தைப் பிரமாணமாகக் கொண்டமையானே அறியப்படும். 'வைகுறுவிடியல்' என்பதைப் பண்புத்தொகையாகக் கொண்டு "வைகறை யாமம்" என்றாரென்றா லென்னை யெனின், அது முன்னர்க்காட்டிய இருவகை வழக்கோடும் மாறுபடுதலின் அவ்வாறு கொள்ளார் என்பது. இனி, 'வைகுறுவிடியல்' என்னும் பாடத்துக்கு, 'வைகுறுவிடியல்' என்பதை வினைத்தொகையாகக் கொண்டு, இருள்கழிகின்ற விடியல், (=வைகறை) எனப் பொருள் கொண்டாலென்னை

யெனின், கலித்தொகை முதலிய சங்கஇலக்கியங்களில் விடியலும் ஓதப்படுதலின் அவ்வாறு கொள்ளார் என்பது. அன்றியும், ஆசிரியர் 'வைகறை' ஒன்றே கொண்டாராயின் 'வைகுறுவிடியல்' எனக்கூறாது 'வைகுறு' என விளங்கக்கூறுவர்மன், அங்ஙனங் கூறாமையானும் அங்ஙனங்கொள்ளாரென்பது. ஆதலின், பரத்தைவயிற்பிரிந்தார் பெரும்பாலும் மீள்வது வைகறையே யாதல் பற்றி அது கூறினார் என்றலே பொருத்தமாம். இங்ஙனமே எற்பாட்டையும் மாலையுளடக்கினாரு முளர்; பொழுதுபடு தலைச் சார்ந்த மாலைக்காலமே மிகுதியும் இரங்கலைத்தரு தலின். அங்ஙன மடக்கினமை பின்னர்க் காட்டுதும். மாலை மயங்கிவந்தது என்பர் நச்சினார்க்கினியர். இலக்கியங்களுள் பெரும்பாலும் வருதலின் யாமுரைத்தவாறே கோடலே பொருத் தமபோலும்.

வைகல் என்பது கழிதல் என்னும் பொருட்டு; அது ''வைகலும் வைகல் வரக்கண்டும்'' என்பதனா லறியப்படும். கழிதல் என்பது முற்றாய் நீங்குதலையுணர்த்தாது; ஆதலின் வைகுறு என்றார். வைகுறு கழிதலுறுவது ஆதலின் விடியல் வேறென்பது நன்கு பெறப்படும். நாற்கவிராசநம்பியும் நக்கீர னார்போலவே விடியலையும் வைகறையுளடக்கிக் கூறினா ரென்றலே பொருத்தமாம்.

இனி எற்பாடு என்பதற்கு ஞாயிறுபடுதலென உரையாசிரி யர் யாவருங் கொள்ளவும் **சிவஞானமுனிவர்** ஞாயிற்றின் உதயம் என்றனர். நாயகரைப்பிரிந்தோர் வருந்துவது இராக்காலமன்றிப் பகற்காலமன்மை யானும், பகற்காலங் காமந்தணியுங்காலமன்றி மிகுங்காலமன்றாதலானும், **கந்தபுராணத்தில்** இந்திராணியினு டைய அணியைக்கண்டு இராக்காலம் முழுதும் வருந்திய இந்திரன் விடிந்தபின் அக்காமந் தணிந்தானெனக் கூறப்படுதலா னும், இராமபிரானைக்கண்டு காமமுற்ற சூர்ப்பனகையும் அவ்வாறே தணிந்தாளென **இராமாவதாரத்திற்** கூறப்படுதலா னும், நெய்தற்றிணைபாடினாரெல்லாம் ஞாயிறுபடுங்கால மாகவே வைத்துப் பாடியிருத்தலானும், ஞாயிறுபடுதல்கண்டு இரங்கிய தலைவி தோழி முதலியோராற்ற ஆறியிருக்கும் மாலைக்காலத்துக்குமுன்னர் இரங்குதற்குரியகாலங் கூறுதலே முறையாதலானும் ஞாயிறுபடுதலென்பதே பொருத்தமாகவும், உதயமென்று முனிவர்கூறியகருத்து யாதோ அறியேம். உதயமே

யெனில் தொல்காப்பியர் வெய்யோன்தோற்றமென விளங்கக் கூறுவாராதலானும் ஞாயிறுபடுதலென்பதே பொருத்தமாம்.

இன்னும் ''எற்படு பொழுதி லிளநிலா முன்றில்'' எனவும் ''படுங்கதி ரமயம் பார்த்திருந்தோர்க்கு'' எனவும், **சிலப்பதிகாரம்** கூறுமாற்றானும், எற்பாடு — ஞாயிறுபடுதல் என்பது அறியப் படும்.

அற்றேல். ''காலையும் பகலும் கையறு மாலையும் ஊர் துஞ்சியாமமும் விடியலும்'' எனக் கூறியபொழுதினுள் எற்பாடு கூறப்பட்டிலதேயெனின் விடியலை வைகறையுளடக்கி நக்கீர னார் கூறுயவாறுபோல எற்பாட்டை மாலையுள் அடக்கிக் கூறினாரென வுணர்க. அங்ஙனமே சிலப்பதிகாரக்காரரும், ''வையமோ கண்புதைக்க வந்தாய் மருண்மாலை'' என மாலையு ளடக்கிக் கூறு மாற்றானும் அறியப்படும். இது பற்றியே சிலப்பதிகார உரையாசிரியரும், நெய்தற்குச் சிறுபொழுது எற் பாடு எனக்கூறி இவ்வடியை உதாரணமாகக் காட்டினார்.

இன்னும் நச்சினார்க்கினியர், இனி வெஞ்சுடர் வெப்பந் தீரத் தண்ணறுஞ்சோலை தாழ்ந்து நீழற்செய்யவுந் தண்பதம் பட்ட தெண்கழி மேய்ந்து பல்வேறு வகைப்பட்ட புள்ளெல்லாங் குடம்பை நோக்கி உடங்கு பெயரவும், புன்னை முதலிய பூவி னாற்றம் முன்னின்று கஞற்றவும், நெடுந்திரையழுவத்து நிலாக் கதிர்பரப்பவுங் காதல்கைம்மிக்குக் கடற்கானுங் கானற்கானும் நிறைகடந்து வேட்கைபுலப்பட உரைத்தலின், ஆண்டுக் காமக் குறிப்பு வெளிப்பட்டு இரங்கற்பொருள் சிறத்தலின் எற்பாடு நெய்தற்கு வந்தது எனக் கூறிய கருத்திற்கேற்ப முறையே நற் றிணையினும் அகநானூற்றினும்,—

''பெருங்கடன் முழங்கக் கானன் மலர
விருங்கழி யோத மில்லிறந்து மலிர
வள்ளிதழ் நெய்தல் கூம்பப் புள்ளுடன்
கமழ்பூம் பொதும்பர்க் கட்சி சேரச்
செல்சுடர் மழுங்கச் சிவந்து வாங்கு மண்டிலம்
கல்சேர்பு நண்ணிப் படரடைபு நடுங்கப்
புலம்பொடு வந்த புன்கண்மாலை
யன்ன ருன்னார் கழியிற் பன்னாள்

வாழலேன் வாழி தோழி யென்கட்
பிணிபிறி தாகக் கூறுவர்
பழிபிறி தாகல் பண்புமா ரன்றே'' (நற்- கசஎ.)

''நெடுவேண் மார்பி லாரம் போலச்
செவ்வாய் வானந் தீண்டி மீனருந்து
பைங்காற் கொக்கின் னிரைபறை யுகப்ப
வெல்லை பைப்பையக் கழிப்பிக் குடவயிற்
கல்சேர்ந் தன்றே பல்கதிர் ஞாயிறு
மதரெழின் மழைக்கண் கலுழ விவளே
பெருநா ணணிந்த சிறுமென் சாயன்
மாணலஞ் சிதைய வேங்கி யானா
தழறொடங் கினளே பெரும வதனாற்
கழிச்சுறா வெறிந்த புட்டா ளத்திரி
நெடுநீ ரிருங்கழிப் பரிமெலிந் தசைஇ
வல்வில் லிளையரோ டெல்லிச் செல்லாது
சேர்ந்தனை செலினே சிதைகுவ துண்டோ
பெண்ணை யோங்கிய வெண்மணற் படப்பை
யன்றி லகவு மாங்கட்
சிறுகுர னெய்தலெம் பெருங்கழி நாட்டே'' (அக - கஉ0)

எனக் கூறப்படுதலானும், அவர் கருத்தே ஈண்டுப் பொருத்த மாதல் காண்க.

இன்னும், நற்றிணையுள்ளும்,

''ஞாயிறு ஞான்று கதிர்மழுங் கின்றே
யெல்லியும், பூவீ கொடியிற் புலம்படைந் தன்றே
வாவலும் வயின்றொரும் பறக்குஞ் சேவலு
நகைவாய்க் கொளீஇ நகுதொறும் விளிக்கு
மாயாக் காதலொ டதர்ப்படத் தெளித்தோர்
கூறிய பருவங் கழிந்தன்று பாரிய
பராரை வேம்பின் படுசினை யிருந்த
குராஅற் கூகையு மிராஅ விசைக்கு
மானா நோயட வருந்தி யின்னுந்
தமியேன் கேட்குவன் கொல்லோ
பரியரைப் பெண்ணை யன்றிற் குரலே''

என எற்பாடுவருதலும், பிற பழந்தமிழ் நூல்களிலும் இவ்வாறு வருதலுல் நோக்குக. இன்னும், எற்பாடு ஞாயிறுபடுதலென்னுங்

கருத்துறவே "கதிரு மெலிந்து கருங்கடல் வீழ்ந்தது" என அன்பிணைந்திணை யியற்றினாரும் நங்கருத்தோடொப்பக் கூறல் காண்க (செந்தமிழ் உரு-ம் தொகுதி பக்கம்—உஎஅ.)

இன்னும், இவ்வருவகைப்பொழுதும் ஐவகைநிலத்திற்கும் உரிப்பொருள்பற்றியன்றி, அவ்வந்நிலத்துமக்களின் தொழில் நிகழ்ச்சிபற்றியும் உரியவாதல் காட்டுதும். முல்லைநிலத்து ஆயர்க்ள் பகலில் மேய்த்த ஆநிரைகளையும் பிறநிரைகளையும் கொண்டுவந்து தொழுவங்களிற் சேர்த்துப் பின் பால்கறத்தன் முதலிய தொழில்களையுஞ் செய்து தத்தமில்லிற்கு மீளுங்காலம் ஞாயிறுபட்ட மாலையேயாதலானும், "குறிஞ்சிநிலத்து வேட்டுவரும் தெய்வவணக்கம், வெறியாடன் முதலிய சில தொழில் களைச் செய்யுங்காலம் இடையாமம் ஆகலானும், பாலை நிலத்து எயினரும் வழிச்சென்று வெயின்மிகுதிநோக்கி மரநீழல்களில் ஒதுங்கியிருப்போரை ஆறலைக்குங்காலம் நடுப்பகலேயாதலானும், நெய்தனிலத்துப் பரதவரும் மீன்பிடித்தல், உப்புவிளைத்தல், அவை விற்றன்முதலிய தொழில்களைப் பெரும்பாலும் வெயில் வெப்பங் குறையுங்காலமாகிய எற்பாடேயாதலானும் அறுவகைச்சிறு பொழுதும் தொழில்பற்றியும் அவ்வந்நிலத்துக் குரியவாதல் காண்க. ஆயர்கள் தந்தொழில்செய்து மீளுங்காலம் மாலை என்பதை,

தலையிறும்பு கதழு நாறுகொடிப் புறவின்
வேறுபுலம் படர்ந்த வேறுடை யினத்த
வளையான் றீம்பான் மிளைசூழ் கோவலர்
வளையோ ருவப்பத் தருவனர் சொரிதலிற்
பலம்பெறு நசையொடு பதிவயிற் றீர்ந்தநும்
புலம்புசே ணகலப் புதுவி ராகுவிர்
பகர்விரவு நெல்லின் பலவரி யன்ன
தகர்விரவு துருவை வெள்ளையொடு விரைஇக்
கல்லென் கடத்திடைக் கல்லி னிரைக்கும்
பல்யாட் டினநிரை யெல்லினிர் புகினே
பாலும் மிதவையும் பண்ணாது பெறுகுவிர்."

(மலைபடுகடாம் சOஎ கஎ

என்பதனாலும், குறிஞ்சிநிலத்து வேட்டுவர், தெய்வவணக்கம், வெறியாடன் முதலியன செய்யுங்காலம் இடையாமம் என்பதனை, ''அணங்குடை நெடுவரை'' என்னும் அகப்பாட்டினுள்

''களனன் கிழைத்துக் கண்ணி சூட்டி
வளநகர் சிலம்பப் பாடிப் பலிகொடுத்
துருவச் செந்தினை குருதியொடு தூஉய்
முருகாற்றுப் படுத்த வுருகெழு நடுநாள்''

என்பதனாலும், உழவர்கள் வைகறையிற் றுயிலெழுந்து சென்று வயல்களிற் றொழில்செய்து மீளுங்காலம் விடியல் என்பதை,

''மலைகண் டன்ன நிலைபுணர் நிவப்பிற்
பெருநெற் பல்கூட் டெருமை யுழவ
கண்படை பெறாது தண்புலர் விடியற்
கருங்கண் வராஅற் பெருந்தடி மிளிர்வையொடு
புகர்வை யரிசிப் பொம்மற் பெருஞ்சோறு
கவர்படு கையை கழும மாந்தி
நீருறு செறுவி னாறுமுடி யழுந்தநின்
னடுந ரோடுநீ சேறி யாயின்வண்
சாயு நெய்தலு மோம்பு மதி'' (நற்றிணை-கூ௰)

என்பதனாலும்,

''துளங்குதசும்பு வாக்கும் பசும்பொதித் தேறல்
இளங்கதிர் ஞாயிற்றுக் களங்கடொறும் பெறுகுவிர்''
(மலைபடுகடாம்-சுக்ஷச—ரு)

என்பதனானும், எயினர்கள் வழிச்செல்வோரை யாறலைப்பது நடுப்பகலென்பதை,—''வானம் பெயல்வளங் காப்ப'' என்னும் அகப்பாட்டினுள்,

''நிறைவன விமைக்கு நிரம்பா நீளிடை
யெருவை யிருஞ்சிறை யிரீஇய விரியிணர்
தாதுண் டும்பி முரலிசை கடுப்பப்
பரியின துயிர்க்கு மம்பினர் வெருவர
வுவலை சூடிய தலையர் கவலை
யார்த்துட னரும்பொருள் வவ்வலின் யாவதுஞ்
சாத்திடை வழங்காச் சேட்சிமை யதர
சிறியிலை நெல்லித் தீஞ்சுவைத் திரள்கா

யுதிர்வன தாஅ மத்தந் தவிர்வின்று
புள்ளி யம்பிணை யுணீய வுள்ளி
யறுமருப் பொசித்த தலைய தோல்பொதி
மறுமருப் பிளங்கோ டதிரக் கூடஞ்
சுடர்தெற வருந்திய வருஞ்சுர மிறந்தாங்கு'' (உஷக)

என்பதனாலும், ('சுடர்தெற' என்றதனால் நடுப்பகல் பெறப் படும்,) பரதவர் மீன்வேட்டையாடற்குரியகாலம் பெரும்பாலும் எற்பாடென்பதை,

''நெடுங்கயிறு வலந்த குறுங்க ணவ்வலைக்
கடல்பா டழிய வினமீன் முகந்து
துணைபுண ருவகையர் பரத மாக்க
ளிளையரு முதியருங் கிளையுடன்' றுவன்றி
யுப்போ யுமண ரருந்துறை போக்கு
மொழுகை நோன்பக டொப்பக் குழீஇ
யயிர்திணி யடைகரை யொலிப்ப வாங்கிப்
பெருங்களந் தொகுத்த வுழவர் போல
விரந்தோர் வறுங்கல மல்க வீசிப்
பாடுபல வமைத்துக் கொள்ளை சாற்றிக்
கோடுயர் திணிமணற் றுஞ்சுத்துறை'' (அகம்-கங0)

என்பதனானும்,

''நெடுங்கட லலைத்த கொடுந்திமிற் பரதவர்
கொழுமீன் கொள்கை யழிமணற் குவைஇ
மீனெய் யட்டிக் கிளிஞ்சிலிற் பொத்திய
சிறுதீ விளக்கிற் றுஞ்சு நறுமலர்ப்
புன்னை யோங்கிய துறைவன்'' (நற்றிணை—கஎரு)

என்பதனானும் அறிந்து கொள்க.

இங்ஙனம்,
**சி. கணேசையர்,**

---

இக்கட்டுரை தொகுதி 26 பகுதி 2-இல் 1928-ஆம் ஆண்டில் செந்தமிழ் இதழில் வெளிவந்தது.



# இருமொழி அகராதிகளில் பலபொருள் ஒருசொல்

(டாக்டர். ஏ. ஆதித்தன்
மதுரை·காமராசர் பல்கலைக் கழகம்)

தமிழ் – ஆங்கில இருமொழிப் பொது அகராதிகளில் பல பொருள் ஒருசொல் (Polysemantic word) அமைந்துள்ளமுறைமை யினை விவரிப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும். இவ்வாய் விற்கு வின்சுலோவின் தமிழ்–ஆங்கில அகராதி (1862), 'லிப்கோ' தமிழ்–ஆங்கில அகராதி (1966), சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேரகராதி (1924–29) ஆகியன எடுத்துக் கொள்ளப்பட் டுள்ளன.

தமிழில் பெரும்பான்மையான அகராதிகளில் பலபொருள் ஒருசொல்வடிவங்கள் அவற்றின் வகைகளுக்கேற்ப வேறுபடுத்தப் படாவிட்டாலும் சில அகராதிகள் சில சூழல்களில் இவற்றை வேறுபடுத்தியுள்ளன். பலபொருள் ஒருசொல் சுட்டும் பொருள் களுக்கிடையே உறவு காணப்படுமாயின் அதனைத் தொடர்பு டைப் பலபொருள் ஒருசொல் (Polynym) எனவும், பலபொருள் ஒருசொல் சுட்டும் பொருள்களுக்கிடையே உறவு காணப்பெறா நிலையில் அதனைத் தொடர்பிலாப் பலபொருள் ஒருசொல் (homonym) எனவும் பலபொருள் ஒருசொல்லை வேறுபடுத்துவர் அறிஞர்.

இவ்விருவகைப் பலபொருள் ஒரு சொற்களை முற்றிலும் வேறுபடுத்த முடியாதென அறிஞர்கள் கருதினாலும் தமிழ் மொழியினைப் பொறுத்தமட்டிலும் மீட்டுருவாக்கத்தின் (recons-truction) வாயிலாக வேறுபடுத்துதல் இயலும். இவற்றை வேறு படுத்துவது பொருண்மை மாற்றங்களைக் (semantic changes) கண்டறிய மிகவும் துணைபுரியும்.

**தொடர்புடைப் பலபொருள் ஒருசொல்**

தமிழ் அகராதிகளில் பலவிடத்துத் தொடர்புடைப் பல பொருள் ஒருசொல்லுக்கு ஒரேஅமைவு (entry) கொடுக்கப்பெற்று அனைத்துப் பொருள்களும் அதே அமைவில் சுட்டப்பெற்றுள் ளன. இடச்சுருக்கீடு காரணமாகக் கீழ்க்காணும் வகையில் அனைத்துப் பொருள்களும் ஒரே அமைவில் கொடுக்கப்பட்டுள் ளன.

ஏடு–(N.) 1. பூவிதழ், petal; 2. கண்ணிமை, eyelid; 3. பனையோலை, palm leaf; 4. புத்தகஇதழ், a sheet in the book; 5. வாழை இலைத் துண்டு, plantain leaf; 6. பாலின் ஆடை, cream of milk [விப்கோ அகராதி].

சில சூழல்களில் மட்டுமே தொடர்புடைப் பலபொருள் ஒருசொல்லின் பொருள்களுக்குத் தனித்தனி அமைவுகள் கொடுக் கப்பட்டுள்ளன.

அரம் [1] - N., file, rasp, அராவும் கருவி
அரம் [2] - N., nether world of serpents, பாதலம் [தமிழ்ப் பேரகராதி]

தொடர்புடைப் பலபொருள் ஒருசொல்லின் பொருள் கள் ஒவ்வொன்றிற்கும் தனித்தனி அமைவுகள் கொடுக் கும் நிலையில் அகராதியின் வடிவம் பெரிதாக அமைந்தாலும் இம்முறையில் பொருள்களுக்கிடையே காணப்பெறும் தொடர் பினைக் கண்டறிதல் இயலும். தனித்தனி அமைவுகள் கொடுக்கும் நிலையில் சொல்வகை (part of speech), ஒலிப்பு முறை (pronunciation) போன்றவற்றை மீண்டும் மீண்டும் குறிப்பிடும் நிலை ஏற்படுமென அறிஞர்கள் கூறுவர். இதனைத் தவிர்க்கக் கீழ்க்காணும் வகையில் (–) இக்குறியைப் பயன்படுத்தலாம்:

அமிழ்தம் – N. ambrosia, அமிர்தம்
– food, உணவு

தமிழ்ப் பேரகராதி தொடர்புடைப் பல்பொருள் ஒரு சொல்லின் பொருள்களைக் குறிப்பிடும் அமைவுகளுக்கிடையே ஆக்கச்சொற்களையும் (derived forms) கொடுத்துள்ளது.

ஒளி [1] – N., light, brightness, splendour, brilliancy, காந்தி
ஒளி [2]தல் -V.int., to hide, steal away, flee into conce-

alment, மறை (slet) தல்

ஒளி [3]த்தல் -V. caus., to hide, conceal, keep out of sight மறைத்தல்

ஒளி[4] – N., hiding, withdrawing from view. மறைகை [தமிழ்ப் பேரகராதி]

பொது அகராதிகளில் தொடர்புடைப் பலபொருள் ஒரு சொல்லின் பொருள் அனைத்தும் குறிப்பிடப்பெறல் வேண்டும். ஆனால் இவ்வகராதிகளில் அனைத்துப் பொருள்களும் குறிப்பிடப் பெறவில்லை.

தொடர்புடைப் பலபொருள் ஒரு சொல்லில் காணப்பெறும் மிகப்பெரிய சிக்கல் பொருள்களின் வரன்முறை (Order of meanings) பற்றியதாகும்.

பலவிடத்துத் தொடர்புடைப் பலபொருள் ஒருசொல்லின் பொருள்கள் வரலாற்று நிலையில் சுட்டப்பெற்றுள்ளன.

செம்பு – N ., l. gold, பொன்; 2. copper cuprum as reddish தாமிரம்; 3. metal vessel, செம்பு முதலியவற்றால் செய்யப்பட்ட பாத்திரவகை [தமிழ்ப் பேரகராதி]

சிலவிடத்துப் பயின்று வரும் பான்மையின் அடிப்படையில் frequency) அதிகம் பயின்று வரும் பொருள் முதலில் சுட்டப் பெற்றுள்ளது.

சொற்பாடு – N., 1. arrangement, mutual understanding, உடன் படிக்கை, 2. stigma, பழிச்சொல் (தமிழ்ப் பேரகராதி)

மேலும் தருக்க முறையிலும் (logical connections) தொடர் புடைப் பலபொருள் ஒருசொல்லின் பொருள்கள் சில சூழல் களில் சுட்டப்பட்டுள்ளன.

இக்கு - N., 1. waist, middle, இடை; 2. tucking of a woman's cloth, சீலையை இறுக்கிக் கட்டும் முடிச்சு. 3. danger, ஆபத்து (தமிழ்ப் பேரகராதி)

தொடர்புடைப் பலபொருள் ஒரு சொல்லின் பொருள் களை வரலாற்று நிலையில் அமைத்தால் இப்பொருள்களுக் கிடையே காணப்பெறும் தொடர்பினையும், பொருள் நீட்சியை யும் (semantic extension) கண்டறிய முடியும்.

அகராதிகளில் தொடர்புடைப் பலபொருள் ஒருசொல்லின் பொருள்களை ஒரே வரன்முறையில் அமைக்க வேண்டியதில்லை என அகராதியியல் அறிஞர்கள் பலர் கருதினாலும் ஒரே வரன் முறையினை அகராதி முழுமைக்கும் பின்பற்றுதல் மிக்க பயனுடையதாக இருக்கும்.

**தொடர்பிலாப் பலபொருள் ஒருசொல்**

பெரும்பான்மையான இடங்களில் தொடர்பிலாப் பலபொருள் ஒரு சொல்லின் பொருள்கள் அனைத்திற்கும் தனித்தனி அமைவுகள் கொடுக்கப் பெறவில்லை.

கண் - N., 1. the eye. விழி 2. A knot or point in a tree, கணு, 3. bamboo. மூங்கில் 4. place, location situation. கண் 5. a form of the locative case that is employed in grammatical examples, ஏழன் உருபு 6 kindness, graciousness. benignity. protection. கண்ணோட்டம் 7. greatness, பெருமை (வின்சுலோ அகராதி)

சில சூழல்களில் தனித்தனி அமைவுகளும் பொருள்களின் அடிப்படையில் கொடுக்கப்பட்டுள்ளன.

அலி[1] N., hermaphrodite. being which is neither man nor woman wholly, ஆண், பெண் அல்லாதது.

அலி[2] N., boiled rice. சோறு (தமிழ்ப்பேரகராதி)

சில அகராதிகள் சொல்வகை வேறுபட்ட நிலையிலும் வெவ்வேறு அமைவுகள் கொடுக்கவில்லை.

பல் - (N), எயிறு, tooth, (Adj) பல. many (லிப்கோ அகராதி)

சில அகராதிகள் அகராதிப் பொருள் வேறுபடும் தொடர்பிலாப் பலபொருள் ஒருசொல்லின் (lexical homonym) பொருள்களுக்குத் தனித்தனி அமைவுகள் கொடுக்காமல் இலக்கணப் பொருளும் அகராதிப்பொருளும் வேறுபடும் தொடர்பிலாப் பலபொருள் ஒரு சொல்லின் (lexico - grammatical homonym) பொருள்களுக்கு மட்டும் தனித்தனி அமைவுகள் கொடுத்துள்ளன.

துரு –N., 1. rust, இரும்புக்கறை, 2. verdigris: களிம்பு (வின்சுலோ அகராதி)

தவ [1] - (Adv) மிக, much

தவ [2] - (V.) நீங்கு, to depart (லிப்கோ அகராதி)

தமிழ்ப் பேரகராதி (பக்.9) பெயர், வினை என்னும் சொல் வகையில் அமையும் தொடர்பிலாப் பல பொருள் ஒரு சொல்லின் பொருள்களுக்குத் தனித்தனி அமைவுகள் கொடுக்கப்பட்டுள்ளன எனவும், வினை தவிர்ந்த சொல்வகைகளுக்கு ஒரே அமைவுதான் கொடுக்கப்பட்டுள்ளன எனவும் குறிப்பிடுகின்றது. இதற்கு முரண்பட்ட நிலையினையும் தமிழ்ப் பேரகராதியில் காணமுடிகின்றது.

ஆம்[1] – N., water, நீர்

ஆம்[2] – Adv., yes, so expressing assent, recollection, சம்மதம் காட்டும் சொல்

ஆம்[3] – Part., a connecting increment between the parts of a compound word. சாரியை [தமிழ்ப்பேரகராதி]

வரன்முறையிலும் சிலவிடத்துப் பெயர்கள் முதலாவதாகவும், பிறவிடத்து ஒருநிலைச் சொற்கள் (particles) முதலாவதாகவும் குறிப்பிடப் பெற்றுள்ளன.

ஆ—(Part.), ஒரு வினா எழுத்து, an interrogative letter
ஆ – (N.), பசு, cow [லிப்கோ அகராதி]
தழல் – (N.), நெருப்பு fire
தழல் – (V.), எரிதல் செய், to burn [லிப்கோ அகராதி]

தொடர்பிலாப் பலபொருள் ஒருசொல்லின் பொருள்களுக்குத் தனித்தனி அமைவு கொடுத்து எண்ணிட்டுக் காட்டுவது இதனைத் தொடர்புடைப் பலபொருள் ஒரு சொல்லினின்றும் வேறுபடுத்திக் காட்டப் பெரிதும் பயன்படும்.

நாய்[1] – N., dog, ஒரு விலங்கு
நாய்[2] - N., game place used in dice, சூதாடும்கருவி
} தொடர்பிலாப் பல பொருள் ஒருசொல்

காதல்—N., love, அன்பு
lust, காமவின்பம்
} தொடர்புடைப் பலபொருள் ஒருசொல்

இவ்வகராதிகளில் தொடர்பிலாப் பலபொருள் ஒரு சொல்லின் அனைத்துப் பொருள்களும் பலவிடத்துக் குறிப்பிடப்

பிடப்பெறவில்லை. மேலும் பொருள்களை வரன்முறைப் படுத்துவதிலும் சீர்மை இல்லை. சில சூழல்களில் பெரிதும் பயின்று வரும் பொருள் முதலில் சுட்டப் பெற்றுள்ளது.

நாய்—(N.) 1. ஒரு விலங்கு, dog 2. சூதாடும் கருவி, game piece used in dice [லிப்கோ அகராதி]

தமிழ்ப் பேரகராதியில் தமிழ்மொழிக்குரிய பொருள் முதலிலும் கடன்பெற்றவை இறுதியிலும் குறிப்பிடப் பெற்றுள்ளன.

மாலை[1]— N., evening, அந்திப்பொழுது
மாலை[2] –N., nature, natural quality, இயல்பு
மாலை[3]— N., garland, wreath of flowers, தொடுத்த பூங்கோதை [தமிழ்ப் பேரகராதி]

தொடர்பிலாப் பலபொருள் ஒருசொல்லின் தோற்றம் (origin) பற்றிய குறிப்பினை அகராதியில் சுட்டினால் இவற்றின் வடிவத்திலும் பொருளிலும் ஏற்பட்டுள்ள மாற்றங்களை எளிதில் கண்டறியலாம்.

பொருள் பற்றிய சிக்கல்கள்

மூல மொழிச் (source language) சொல்லுக்கு இலக்கு மொழியில் (target language) பொருள் கொடுக்கும் நிலையில் ஓரளவுக்கு ஒத்த பொருள்கள் பலவற்றைச் சுட்டுவதுண்டு. ஆனால் அவை முற்றிலும் ஒத்த பொருள்களாக (synonyms) அமையுமானால் ஒன்றினைமட்டும் சுட்டுவது போதுமானதாகும்.

உருண்டை— N., l a ball, a bowl, globe, anything that is round, உண்டை 2. roundness, globularness, திரட்சி [வின்சுலோ அகராதி]

மூலமொழியிலுள்ள பலபொருள் ஒருசொல்லுக்கு இணையான இலக்கு மொழிப்பொருள்கள் அனைத்தையும் ஒரே அமைவில் கொடுப்பதனால் எந்தச் சொல்லைத் தெரிவு செய்து கொள்ள வேண்டும் என்பதனை இலக்கு மொழிபற்றிய முழு அறிவு இருந்தால்தான் உணர்ந்துகொள்ள முடியும்.

உருட்டு— V.N., 1. revolving on a plane, the revolution or turning a wheel, whiriling, உருட்டுகை

2. fraud, artifice, trick, sophistry in overcoming an antogonist, புரட்டு 3. roundness, globosity, moulding, திரட்சி 4. terrifying, frightening, driving away (வெருட்டு
[தமிழ்ப் பேரகராதி]

இயானவுச்சி (1957, பக். 273) என்பார் இலக்கு மொழியைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் இத்தகைய, சூழலில் எளிதாக உரிய பொருளைத் தெரிவுசெய்துகொள்வார்களெனக் குறிப்பிடுகின்றார். அல்கசிமி (1977, பக். 69) என்பார் சூழல் (context) உரிய பொருளைத் தெரிவு செய்ய எப்போதும் பயன் படுவதில்லை எனக் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ் இருமொழி அகராதிகளில் பலவிடத்துச் செந்தமிழ்ச் சொற்கள் பொருளைச் சுட்டுவதற்கும் பயன்படுத்தப் பட்டுள் ளமை தமிழ்மொழி பேசுபவர்களுக்குக் கூட புரிந்துகொள்வதற்கு இன்னலைக் கொடுக்கின்றது.

மயரி – N., 1. person whose mind is confused, bewildered person, உன்மத்தன் 2. lascivious person, காமுகன் (தமிழ்ப் பேரகராதி)

பல இடங்களில் ஆங்கிலப் பொருளிணைச் சொற்கள் தமிழ்ச் சொல்லின் முழுப்பொருளையும் உணர்த்தவில்லை.

பாலை- N., 1. arid, desert, tract, முல்லையும் குறிஞ்சியும் திரிந்த நிலம் 2. aridity, barrenness, பாலைத்தன்மை (தமிழ்ப் பேரகராதி)

அடைக்காய் - N., 1. areanut, பாக்கு 2. pansupari, தாம்பூலம் (தமிழ்ப் பேரகராதி)

சில அமைவுகளில் கொடுக்கப் பெற்றுள்ள பொருள் மிகவும் நீண்டதாக அமையப்பெற்றுள்ளது.

பாதாதிகேசம் - N., 1. From head to foot அடிமுதல்தலைவரை **2.** a poem describing the beauty of a person in respect of all the limbs from the sole of the foot to the tuft of hair on the head, தலைமகளின் அடிமுதல் கேசம் வரையிலுள்ள உறுப்

புக்களைச் சிறப்பித்துக் கூறும் பிரபந்த வகை (தமிழ்ப்பேரகராதி)

காதோலை - N.,1. a small roll of a palmirah leaf often stained with magenta used by woman as an ornament inserted in the lobe of the ear, காதுக்கிடும் பனங்குருத்தின் ஓலை 2, ear ornament made of gold, gems diamond, etc., worn by woman, மகளிர் காதணி வகை (தமிழ்ப் பேரகராதி)

பொருள் கொடுக்கும் நிலையில் பல அமைவுகளில் இணை யான சொல்வகை கொடுக்கப் பெறவில்லை. பெயரடை (adjective), வினையடை (adverb) வடிவங்களுக்குப் பெயர் வடிவங்களே பொருளாகக் கொடுக்கப்பட்டுள்ளன.

கொன் - (Adv.) 1. பயனில்லாமை uselessness 2. அச்சம், fear [லிப்கோ அகராதி]

பை - 1. பசுமை, greatness 2. இளமை youthfulness [லிப்கோ அகராதி]

வல் - (Adj.) 1. வளம், abundance 2. பெருமை, greatness,

3. கூர்மை, sharpness, etc.. [தமிழ்ப் பேரகராதி]

சில அமைவுகளில் தமிழில் சிறப்புப் பொருளும் (special meaning) பொதுப்பொருளும் (general meaning) சுட்டப்பெற ஆங்கிலத்தில் சிறப்புப்பொருள் மட்டுமே கொடுக்கப்பட்டுள்ளது.

திணை - (N.) 1. பூமி, இடம், earth 2. குலம், family [லிப்கோ அகராதி]

சில அமைவுகளில் தமிழில் சிறப்புப்பொருள் மட்டுமே குறிப்பிடப்பெற, ஆங்கிலத்தில் இருவகைப் பொருள்களும் குறிப் பிடப் பெற்றுள்ளன.

காதல் - N., 1. warm attachment, fondness, love, affection அன்பு, 2. lust, காமவிச்சை, etc., [தமிழ்ப் பேரகராதி]

உருண்டை - N., 1. a ball, a bowl, a globe, anything round, உண்டை, 2. roundness, globularness, திரட்சி [வின்சுலோ அகராதி]

சிற்சில அமைவுகளில் ஆங்கில மொழியில் தேவைக்கு அதிகமான விளக்கங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

யூகம் - N., 1. arragement or disposition of forces for] fighting military array, படையின் அணிவகுப்பு 2. rock horned owl, கோட்டான்

[வின்சுலோ அகராதி

கன்னியாகுமரி - N., the ancient river kanni said to have been swallowed by the sea, குமரியாறு 2. cape comorin, the sourthern most point of India, under the protection as the goddess Durga, பரத கண்டத்தின் தென் கோடிமுனை [தமிழ்ப் பேரகராதி]

இருமொழி அகராதியில் மூலமொழியிலுள்ள பலபொருள் ஒருசொல்லின் பொருளுக்கு இணையாக இலக்கு மொழியிலுள்ள சொற்களைக் கொடுக்கும் நிலையில் பொருள் வேறுபாடு (meaning discrimination) சிறப்பாக அமைய வேண்டும். பொருள் வேறுபாடு சிறப்பாக அமைந்தால்தான் அகராதி மொழியினைத் தெரிந்துகொள்வதற்கும், படைப்பாக்கத்திற்கும், மொழிபெயர்ப்பிற்கும் மிக்க பயனுடையதாக அமையும்.



# பழமையை விரும்பிய பாரதிதாசனார்

(டாக்டர் வே. இரா. மாதவன்
ஓலைச்சுவடித்துறை
தமிழ்ப் பல்கலைக் கழகம்,
தஞ்சாவூர்)

ஒரு கவிஞனுடைய இயல்பான கருத்துக்கள், தூய உணர்ச்சிகள் ஆகியவற்றின் வெளிப்பாடே கவிதை.

பொதுவாக, உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் தன்மையுடையதே கவிதை. உத்தம மனப்பான்மை, ஊடுருவிப் பார்க்கும் அறிவுக் கூர்மை, சமூகத்தை இயக்கும் தலைமை, முருகுணர்ச்சி, மன்பதையிடம் அன்பு, இடத்துக்கேற்ற இசை,இவற்றுடன் அனுபவத்தையும் இணைத்து வாழ்க்கையைச் சித்திரித்துக் காட்டித் திரும்பத் திரும்பப் படித்தின்புறுமாறு செய்வது எதுவோ, அதுவே கவிதையாம். சமூகத்தை எழுச்சி பெறச் செய்யும் எந்தக் கவிஞனிடத்திலும் இத்தன்மைகளைக் காணலாம்.

புரட்சிக்கவியென்று போற்றப்பெறும் பாவேந்தர் பாரதிதாசனார் சமூக முறைகேடுகளை எதிர்த்துப் பாடினார். ஆயின் மற்றவர்கள் நினைப்பது போன்று, முற்போக்கு என்ற போர்வையில் அவர் மறந்தவர் அல்லர்.

பாவேந்தரின் வாழ்க்கையில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளும், அவர் நண்பர்களோடு உரையாடியபோது வெளியிட்ட அவர்தம் உள்ளக்கருத்துக்களும் எவ்வளவு உண்மையானவை என்பதை அவருடன் பழகிய நண்பர்கள் நன்கு அறிவர்.

**சைவப்பற்று**

பாரதிதாசனார் இளமையில் ஓர் ஆழ்ந்த முருக பக்தர்; சைவப்பற்றாளர். மயிலம் முருகன் மீது இவர் பாடிய சுப்பிரமணியன் துதியமுது அதற்குச் சான்று. பள்ளி மாணவராய் இருந்த நாளில் வழிபாட்டுப் பாடல் பாடுவதில் மிகுந்த விருப்பமுடையவராயிருந்தார்.

**பழைய நூல்களில் பயிற்சி**

இராமாயணம், மகாபாரதம், சங்க இலக்கியங்கள், தேவாரம், திருவாசகம், ஆழ்வார் பாசுரங்கள், சிவஞான சித்தியார் போன்ற பழைய நூல்களில் இவருக்கு இளமையிலேயே மிகுந்த ஈடுபாடு உண்டு.

**சிறந்த அன்னை யார்?**

பாவேந்தர் தம் பதினெட்டாம் வயதில் ஆசிரியர் பணியை ஏற்றார். அப்போது இருந்த திரு. இராமசாமிப் புலவர் என்னும் 70 வயதுடைய பெரியவர் பாவேந்தரிடம்,

'இலைபடர்ந்த பொய்கை யிடத்தழுதல் கண்டு
முலைசுரந்த அன்னையோ முன்னின் – நிலைவிளம்பக்
கொங்கை சுரந்தவருட் கோமகளோ சம்பந்தா
இங்குயர்த்தாள் ஆர்சொல் எனக்கு?

என்ற நால்வர் நான்மணிமாலைப் பாடலைப் பாடிக்காட்டிப் பொருள் கேட்டார். இப்பாடலில் கூறப்பெறும் இரண்டு பெண்களில் யார் சிறந்த அன்னை? எனக் கேட்டார் பெரியவர். அதற்கு, மங்கையர்க்கரசிதான் என்று அழுத்தம் திருத்தமாகப் பதில் கூறினார் பாவேந்தர்.

அழும் முன்பே பால் நினைந்தூட்டும் தாய் தலையன்புடையவள். அழுவதைக் காதால் கேட்டபின் ஊட்டுபவள் இடையன்புடையவள். கண்ணால் கண்டபின் ஊட்டுபவள் கடையன்பினள். கண்ணால் கண்ட பின்னும் உமாதேவி பாலூட்டவில்லை. இறைவன் உணர்த்திய பிறகே ஊட்டினாள். இவளை எவ்வாறு தாயென்று சொல்ல முடியும்? என்பது பாவேந்தர் வினா. 'சீகாழியில் சம்பந்தக் குழந்தை பாலுக்காக அழுதது' என்று இறந்தகால நிகழ்ச்சியை எதிரில் நின்றவர்கள் எடுத்துரைத்த கணமே பாண்டிமாதேவியின் மார்பகங்கள் விம்மிப் பரந்து பாலைப் பொழிந்தன. 'முலை சுரந்த அன்னை' என்றே உமாதேவி குறிக்கப் பெறுகிறாள். ஆயின், 'கொங்கை சுரந்த அருட் கோமகள்' என்று மங்கையர்க்கரசியார் குறிக்கப் பெறுகிறாள். எனவே, மங்கையர்கரசியே சிறந்தவள் என்று பாவேந்தர் விளக்கியது அன்று அனைவரையும் வியப்பில்

ஆழ்த்தியது. இந்த இளம் வயதில் சமய நூல்களில் இவ்வளவு ஆழ்ந்த அறிவு உள்ளதே என அவரை அனைவரும் வியந்து பாராட்டினர்.

**தெளிந்த சிந்தனை**

பின்னாளில் இவர் சில இயக்கங்களைச் சார்ந்து நின்றாலும், தன்னுடைய சிந்தனையில் மிகமிகத் தெளிவாக இருந்தார். இராமாயணம், பாரதம் போன்றவையெல்லாம் சமயச் சார்புடைய நூல்கள் என்ற கருத்துடையவர் ஆனாலும், அவற்றை அழிக்க வேண்டும் என்ற தீவிர வாதம் உடையவரல்லர் பாவேந்தர்.

**எரிக்க வேண்டுமா?**

இந்தியா விடுதலை பெற்ற காலத்தில் கம்பராமாயணம், பெரியபுராணம் போன்ற நூல்களைத் தீயிலிட்டு எரிக்க வேண்டும் என்று தன்மான இயக்கத்தார் தீவிரமாக இருந்தனர். அப்போது ஒருநாள் வேலூர் மாசிலாமணி முதலியார் விடுதியில் ஒரு திருமணத்திற்குப் பாவேந்தர் வந்திருந்தார். அங்கிருந்த திரு. தெய்வசிகாமணி முதலியார் அவர்கள் பாவேந்தரிடம் 'இராமாயணத்தை எரிக்கிறதைப் பற்றி' அவர் கருத்தைக் கேட்டார். உடனே கோபம் கொண்ட பாவேந்தர், ''இராமயணத்தை எரிப்பதெல்லாம் ரொம்பத் தப்பு, மக்கட்குத் தேவை இல்லாதவை ஒன்றா இரண்டா? பத்து வண்டி தேறும்; எரித்திடுவதனாலேயே மக்கள் திருந்திடுவாங்களா? இதெல்லாம் வீண் வேலை. நம்ம வாழ்வு, வளர்ச்சி, வீழ்வு இவற்றைக் காட்டும் கண்ணாடிதான் அந்த இலக்கியங்கள். அந்தப் புத்தகங்களும் இல்லேன்னா தமிழேது? தப்பான கருத்துள்ள புத்தகமானால் தள்ளி வைப்பதுதான்சரி குப்பையைக் கொளுத்தத் தொடங்கி கோபுரத்தையே கொளுத்தக் கூடாது. அதெல்லாம் ரொம்பத் தப்பு'' என்று கூறினார்.

இதிலிருந்து அவர் பழமையான நூல்களிடம் எத்தகைய பற்றுடையவராயிருந்தார் என்பது புலப்படும்.

**படிப்பதில் சமயம் வேண்டாம்**

'வாளினை எடடா' என்ற பாட்டின் இலக்கணம் எந்த நூலில் இருக்கிறது? என்ற ஒரு கேள்வியை ஒருவர் கேட்டார்.

அதற்குப் பாவேந்தரே பதில் கூறினார். ''யாப்பு நூலிலே எல்லாப் பாட்டுக்கும் இலக்கணம் இருக்காது; எண்கள் அடிப் படையில் ஒன்றிலிருந்து பத்து வரைதான்; அந்த அடிப்படை எண்களிலிருந்துதான் கோடி வரையிலும் கொண்டு போகி றோம்; கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல் இந்த நாலும் தான் உலகில் எல்லாக் கணக்கும். இதைப்போல் நால்வகைச் சீரிலிருந்து நால்வகை யாப்பிலிருந்து நாலாயிரம் கொண்டு போகலாம்; நம்ம முன்னோர்கள் இப்படியெல்லாம் செய்திருக்கிறார் கள். தேவாரத்திலே 'பித்தா பிறைசூடி பெருமானே அருளாளா' என்ற பாட்டே என் பாட்டுக்கு முன்னோடி. பிறகு பலரும் கையாண்டிருப்பதைக் கண்டிருக்கேன். நீங்களெல்லாம் ஒன்றைத் தெரிந்துக் கொள்ள வேண்டும். படிக்கிறதிலே மட்டும சமயத்தைப பார்க்காதீங்க. சைவ—வைணவம் பார்க்கப் படாது; எல்லாவற்றை யும் ஒரு பார்வை பார்த்தாதான் அவர்களைவிட நாம் எப்படி மக்கட்கு இலக்கியம் படைக்கலாமென்று தோன்றும். பல பூக்களிலே போய்த் தேனைச் சேர்த்தால்தான் நல்ல தேன் கிடைக்கும். அதுபோலவே இலக்கியங்களை விருப்பு. வெறுப்பு அற்றுப் படித்து, வேண்டுமென்பதை எடுத்துக் கொண்டு, வேண்டாததை விடத் தெரியணும். பழயதை எப்பவும் எருவாக்குக கொளளவேண்டும். அப்போதுதான் நம் எழுத்து உரம் பெறும்'' என்று அன்று அவர் உள்ளந் திறந்து கூறியதே உண்மை. ஆம், பழமைப் பண்ணையில் புதுமைப்பயிர் விளைவிக்க வேண்டும் என்றுதான் பாவேந்தர் விரும்பினார்.

**பழந்தமிழ் இலக்கியத்தாக்கம்**

பாவேந்தரின் 'குடும்ப விளக்கு' எவ்வாறு பிறந்தது என்ற வரலாற்றையும் அவரே பலமுறை கூறுவார். ஒருமுறை 1954ஆம் ஆண்டில் காரைக்குடி வி.ஆர்.எம். செட்டியார் அவர்கள் திருச்சி வானொலியில் ஆங்கிலத்தில் பேசும்போது, பாவேந்தரின் 'குடும்ப விளக்கு' பிரெஞ்சு இலக்கியத் தாக்கம் கொண்டது என்று குறிப்பிட்டிருந்தார். அதுபற்றிப் பாவேந்தரிடம் நண்பர் கள் கேட்டபொழுது பாவேந்தரே அவர்களுக்குத் தெளிவுபட விளக்கினார்.

''எனக்குப் பிரெஞ்சு பேசத் தெரியும்; எழுத்துக்கள் தெரி யும். ஆனால் எந்தப் பேரிலக்கியமும் தெரியாது. 'குடும்ப

விளக்கு' கதையே வேறு; பாரதி கவிதா மண்டலம் நடத்திய போது 'நல்ல குடும்பம் ஒரு சர்வகலா சாலை' என்று ஒரு பாட்டு எழுதினேன். அந்தக் காலத்திலே அந்தப்பாட்டு என்னை எல்லோராலும் மதிக்க வைத்தது. உயர்ந்த கவிதைக்குரிய உண்மையும் அழகும் அதில் ஊடுருவியுள்ளன என்று பாராட்டினர். பிறகு என் மகள் திருமணத்தின்போது பாலசுப்பிரமணியன் என்பவர் ஒரு நூல் வெளியிட விரும்பினார். முன்னமே எழுதிய பாட்டை விரிவாக்க எண்ணினேன். ஒரு நல்ல குடும்பம் எப்படி அமைய வேண்டுமென்னும் கருத்து எனக்கு வேதநாயகர் எழுதிய 'பெண் புத்தி மாலை' நூல்தான் தந்தது. அந்தப் பாடல்களின் அறிவுரையும் நாடகப் பாங்கும் எனக்குப் பிடித்திருந்தன. அதோடில்லாமல், நான் சங்க இலக்கியங்களிலும் காவியங்களிலும் ஆழ்ந்திருந்த காலம் அது. நம அகப்பொருள நூல்களிலேயும புற நூல்களிலும் குடும்ப வாழ்வின் மேம்பாடெல்லாம் தமிழ்ப் பண்பாட்டைத் தலை நிமிரச் செய்த பெருமை என்னை ஆட்கொண்டது. இந்தத் தமிழ் மண்ணிற்கும் நீருக்கும வானிற்கும் ஒரு தனிச் சிறப்புண்டு நான் பழைய இலக்கியங்களின் இதயத்திலிருந்தே இவற்றைத் திரட்டிக் கொண்டேன்.

''குடும்பந்தான் ஒரு நாட்டின், பண்பாட்டின் நாற்றங்கால் என்பதால் அன்பு வழி வாழ்கின்ற வாழ்க்கை என்பதைக் காட்டத்தான் ஒரு குடும்பத்தை ஆக்கினேன்'' எனப் பாவேந்தர் அன்று குடும்ப விளக்கை உருவாக்கிய விதத்தைக் கூறினார். இந்த நாட்டின் பழைய பண்பாடும் இலக்கியங்களும் அவர் மனத்தில் எவ்வளவு ஆழமாகப் புதைந்திருந்தன என்பதற்கு இதுபோன்று பற்பல சான்றுகளைக் காட்டலாம்.

### சங்க இலக்கியம் - மக்கள் பாட்டு

சங்கப் பாடல்கள், காவியகாலப் பாடல்களைப் போலவும் கம்பன், வில்லி, ஒட்டக்கூத்தர், செயங்கொண்டார் பாடல்கள் போலவும் சந்த நயம், தாள நயம் இல்லாதவை எனச் சிலர் கூறி வந்ததையும் பாவேந்தர் ஏற்கவில்லை. ''சங்கப் பாடல்கள் நம் நிலத்தில் பாடுபடும் பாட்டாளி மக்கள் மாதிரி; எளிமை, அழகு உண்மை, மகிழ்ச்சி இயல்பாக இதில் இருக்கும்; இயற்கையோடு ஒத்த வாழ்க்கையின் எதிரொலி அவை; ஆனால் பிற்கால நூல்கள் நம்மைப்போல நகர வாழ்க்கையின் ஆடம்பரம், பெருமை,

ஒப்பனை, ஆர்ப்பாட்டம் எல்லாம் கொண்டு செயற்கையோடுள்ளன'' என்று கூறுவார் பாவேந்தர்.

இன்றும் அந்த இயற்கையும் செயற்கையும் எவ்வளவு உண்மை என்பதை நாம் அன்றாடம் கண்டு வருகிறோம்.

### புதுக்கவிதை

பாட்டு என்று எடுத்துக் கொண்டால் அதில் வெறும் வார்த்தை அடுக்கு மட்டும் இருப்பதை விரும்பாதவர் பாவேந்தர். பாட்டு எதுவாயினும் அதில் ஓசை நயமும் கட்டுக்கோப்பும் இருக்க வேண்டும் என்ற பழமை விருப்புடையவர் அவர். புதுக் கவிதைகளில் அவருக்கு அவ்வளவாக ஈடுபாடு இருந்ததில்லை.

G. 4811

''மொழி எண்ணங்களின் உடை; எதுகையும் மோனையும் நேரிழையும் குறுக்கிழையும் மாதிரி; எந்தத் துணியையும் யாப்புத் தறியிலே நெய்யலாம். ஆனால், அது மக்களுக்கு உழைக்க வேண்டும். குடுகுடுப்பைக்காரன் துணி மாதிரி ஒன்று நாம செய்ய முடியாது'' என்பார் அவர்.

விருத்தப்பாவை எளிமைப் படுத்துவதிலும் கட்டளைக் கலித்துறையை எளிமைப் படுத்துவதிலும் பாவேந்தர் வெற்றி பெற்றவர்; ஆயினும் பழைய யாப்பு மரபுகளைப் போற்ற வேண்டும் என்னும் பேரார்வம் கொண்டவர். இதற்காக அவர் பயின்ற பல பழந்தமிழ் நூல்களை அக்காலப் புலவர் பலரும் அறிந்திருக்க மாட்டார்கள் என்றே கூறல் வேண்டும்.

### சமண ராமாயணம்

'எதிர்பாராத முத்தம்' நூலுக்கு முன்னுரை வழங்கிய திரு. சாமி சிதம்பரனார், பஃறொடை வெண்பா பதினான்கு வரிகளுக்கு மேல் கிடையாது என்றும், பாவேந்தர் தவறாக எழுதியிருக்கிறார் என்றும் குற்றம் சாட்டினார். அதை வன்மையாக மறுத்த பாவேந்தர் அதற்கான சான்றையும் காட்டினார். 'தசரத காவியம்' என வழங்கப் பெறும் ஒரு சமண ராமாயணமாகிய தமிழ் நூலில் பல ஆயிரம் வரிகள் கொண்ட பஃறொடை வெண்பா இருப்பதைச் சுட்டிக் காட்டிய பாவேந்தர் தாம் அதை மைசூர் கோலாரிலிருந்து பௌத்தர் ஒருவரிடம்

பார்த்துப் படித்ததாகவும் தெரிவித்தார். இவ்வாறு அவர் பழைய நூல்களில் கொண்டிருந்த ஈடுபாடு மனங்கொள்ளத்தகும்.

**பழங்கலைகளில் ஈடுபாடு**

பழங்காலக் கூத்துக்கலையிலும், ஓவியத்திலும். சிற்பக் கலையிலும் கோயில் அலங்காரத்திலும், பழைய வாத்திய இசையிலும் பெரிதும் ஈடுபாடு கொண்டவர் பாரதிதாசன்.

**மாரியம்மன் திருவிழா**

ஒருமுறை அவர் தஞ்சைக்குப் புகைவண்டியில் செல்லும் போது மாயவரத்தில் வண்டி நின்றது. உணவு சாப்பிட்டுவிட்டுப் புகைவண்டிச் சந்திப்புக்கு அவர் வந்து கொண்டிருந்த போது இரவு ஒன்பது மணி. அப்போது அங்கு மாரியம்மன் திருவிழா. அம்மனைப் பூப்பல்லக்கில் ஏற்றி ஊர்வலமாகக் கொண்டு வந்தனர். பூவின் அலங்காரமும் மணமும் அவரை மெய்ம்மறக்கச் செய்துவிட்டன. மேலும் நாதசுர இசை வேறு; கைப்பையைச் சுமந்த வண்ணம் விடிய விடிய அப்பல்லக்கின் பின்னாலேயே சுற்றிக் கொண்டிருந்த அவர் பிறகு விடியற்காலம் ஐந்து மணிக்கு, வேறு வண்டி பிடித்து ஏறித்தஞ்சைக்குச் சென்றதாகவும் அவரே மிகவும் வேடிக்கையாக நண்பர்களிடம் அடிக்கடி கூறுவார்.

**அருள்மிக்க பக்திப் பாடல்கள்**

திருவள்ளுவர் படத்தை எழுதிய ஓவியர் திரு.வேணுகோபால சர்மா ஒருமுறை பாரதிதாசனாரை வேண்டிக் கேட்டுக்கொண்ட படி அவருக்கு, அம்பிகை மீது ஒரு பாடல் எழுதிக் கொடுத்துள்ளார் பாவேந்தர். அப்பாடல் பெற்றபின் தம் வாழ்க்கையில் இன்னல் பல நீங்கிப் பேரும் புகழும் மேலோங்கியதாகத் திரு. சர்மா அவர்களே குறிப்பிட்டார்.

பாரதி பாணியில் பாவேந்தர் அமைத்த வாணி, சக்தி பாட்டுக்கள், கண்ணன் பற்றிய பழைய சாயல்களை உடையவையே. 'எங்கெங்குக் காணினும்' என்று தொடங்கும் சக்திப் பாட்டு, கண்ணன் கிளிக்கண்ணி போன்றவை இவ்வகையில் குறிப்பிடத்தக்கன.

**திரைப்படத் துறையில்**

திரைப்படத்துறையில் பாவேந்தர் ஈடுபட்டபோதும் அவர் பழமையை விடவில்லை. பழைய இலக்கிய, புராண, சமயத் தலைவர்களை மையமாக வைத்தே அவர் செயல்பட்டார்.

சேலம் மோகினி 'பிக்சர்சார்' 1938–ஆம் ஆண்டில் குழலிசை மாமன்னர் திருவாவடுதுறை இராசரத்தினத்தைக் கதாநாயகனாக அமர்த்தி 'கவிகாள மேகம்' என்ற படத்தை எடுத்தனர். அந்தப் படத்திற்குத் திரைக்கதை, வசனம், பாடல் எல்லாம் எழுதியவர் பாவேந்தர். பிறகு தம் நண்பர் வ. ரா. வின் 'இராமானுஜர்' என்ற படத்திற்கும் பாடல்கள் எழுதினார் அவர்.

அபூர்வ சிந்தாமணி, சுபத்ரா, சுலோசனா, பொன்முடி, வளையாபதி போன்ற படங்களுக்கு 1947 முதல் 1953 வரை திரைக்கதை, வசனம், பாடல்கள் எழுதி வந்தார் பாவேந்தர்.

எனவே, புரட்சிக்கவிஞர் என்று போற்றப்பெறும் பாரதிதாசனார் முற்றிலும் பழமையை வெறுத்தவர், எங்கும் எதிலும் முற்போக்குக் கொள்கைகளை உடையவர், சமயங்களை வெறுத்தவர் என்று மிகையாக நாம் எண்ணுதற்கு இடமில்லை. நம்முடைய பழமையான பண்பாட்டிலும், சமய இலக்கியங்களிலும் ஆழ்ந்த பற்றும், ஈடுபாடும், பயிற்சியும் உடையவர் அவர் என்பதை அறிஞர் உலகம் அறிதல் வேண்டும்.

சமூகச் சிக்கல்கள் என்றும் இருக்கக் கூடியவை. ஒவ்வொரு காலகட்டத்திலும் இவற்றை எதிர்த்துக் குரல்கொடுக்கும் எழுச்சிமிக்க கவிஞர்கள் இருந்துள்ளார்கள். அதுபோலவே, இந்த நூற்றாண்டின் எழுச்சிமிக்க கவிஞராகப் பாரதிதாசனார் திகழ்ந்தார். பெண்ணுரிமைக்காகவும், சமத்துவத்திற்காகவும் அவர் புரட்சிக்கனலை எழுப்பினார் என்பதில் ஐயமில்லை. ஆனால் அவர் ஒரு இந்தியர் என்பதிலும், தமிழர் என்பதிலும் என்றுமே மாறவில்லை. அந்நிய நாகரிக மோகத்திற்கும் அடிமைத்தனத்திற்கும் ஆட்படவில்லை. சமயத்தாரிடமும், பிறமொழியாரிடமும், அவர் வெறுப்புடையவரல்லர். நம் பாரதநாடு பழம்பெரும் நாடு என்பதிலும், இந்நாட்டின் பழைய கலாசாரங்கள் என்றும் போற்றத்தக்கவை என்பதிலும் அவருக்கு அசைக்க முடியாத நம்பிக்கை இருந்தது. அவருடையஇயற்கை உணர்வுகளை முழுமையாக அறியாதவர்களே அவரை ஒரு சார்புடைய கவிஞராகக் காட்டி வருகின்றனர். இது முற்றிலும் கண்டிக்கத்தக்கது.

ஒரு கவிஞன் வெறும் கவிதையாலேயே வெற்றி பெறுவதில்லை, உள்ளார்ந்த பண்புகளாலும் உயரிய எண்ணங்களாலுமே அவன் மதித்துப் போற்றப் பெறுகிறான். புரட்சி என்ற போர்வையில் பழமையை வெறுத்து ஒதுக்கினால் நமக்கு வீழ்ச்யே கிடைக்கும் என்பதை நன்குணர்ந்த பாவேந்தரின் உண்மையுணர்வுகளை மதித்துப் போற்றுவோம்.

---



# வள்ளுவர் காட்டும் வாழ்க்கை நெறி

ஆசிரியர் ய. ராமானுசம்,
இராசபாளையம்)

இந்நிலவுலகின்கண் ஆறறிவுபடைத்த மனிதனும், ஐயறிவு படைத்த விலங்கினங்களும், புள்ளினங்களும், செடி கொடி போன்ற தாவரங்களும் வாழ்கின்றன. மனிதனும் வாழ்கிறான். மனிதனுடைய வாழ்க்கை நெறியைப் பலபட வகுத்துக்கூறிப் போந்தனர் பல சான்றோர்கள். அவர்களுள் முதன்மையானவர் திருவள்ளுவர்.

புள்ளினங்களும் வாழ்வதற்கு ஒரு நெறிவகுத்துக் கொண்டு வாழ்கின்றன. காக்கை இனம் ஒரு மாபெரும் நெறியை இம் மனிதக் கூட்டத்திற்கு உணர்த்துகிறது. பகுத்தறிவற்ற ஓர் இனம் பறந்து சென்று இரைதேடித் தான்மட்டும் உண்ணாதுதன்னினத்தாரைக் கூவி அழைத்து ஒருங்கிருந்து உண்டு மகிழ்ந்து உறங்கும் காட்சியை நாம் கண்கூடாகக் காணலாம். இதனாலன்றோ நம் தெய்வப் பெரும் புலவர் திருவள்ளுவர்,

"காக்கை கரவா கரைந்துண்ணும் ஆக்கமும்
அன்ன நீரார்க்கே உள"என்றார்

இந்நெறி கூட மனிதப்பிறவிக்கு இல்லை எனும்போது மனிதனிடம் எந்நெறிதான் கால்கொண்டுள்ளது என எண்ணத் தோன்றும்.

காலப்போக்கில் நாகரிக வளர்ச்சி அடைந்து முதிர்ந்த நிலை எய்தியும் கூட மனிதன் வாழத் தெரியாதவனாய் இருந்து அல்லலுறுகின்றான். அவனுக்கென ஒரு நெறி வகுக்கத் தவறி விட்டான். உண்பதும் உறங்குவதும் உறங்கி விழிப்பதுமாகவே மனிதனின் வாழ்க்கை அமைந்துவிடின் பயன் என்னாம்? நெறி பிறழ்ந்த ஒரு நிலையே மனிதனை இவ்வலநிலைக்கு ஆளாக்கி விட்டது நெறியுடன் வாழ்ந்தவன் நிலையிலே உயர்ந்துவிட்டான். நெறி தவறியவனின் நிலை பாதாளத்தில் உள்ளது.

வாழ்க்கைத்தேரின் சாரதியாக அமைபவள் வாழ்க்கைத் துணைவியாவள். இத்துணைவியின் மாட்டு எழுகின்ற, எழுந்து அமைகின்ற நெறிதான் வாழ்க்கையை வளம் கொழிக்கச் செய்கிறது. இல்லறம் என்பதென்ன? கணவனும் மனைவியும் ஒருங்கு சேர்ந்து அன்புப் பிணைப்போடு வாழ்வதேயாம். இவ்வன்பு தம்மளவில் நில்லாது ஆற்றுப் பெருக்கென ஓடி அனைவர் மாட்டும் செல்வது அருள் எனப்படும். வெறும் இல்லற வாழ்க்கை பயன்தராது. தான் கொண்ட மனைவி கற்புநெறியில் ஒப்பாரும் மிக்காருமின்றித் திகழ்பவளாக இருந்தாலன்றி உண்மையான வாழ்க்கையின் பயனை நாம் அடைதல் முடியாது.

நமது இலக்கிய வானின் முழுமதி சிலப்பதிகாரம். அக்காவியத்தில் வரும் கோவலனும் கண்ணகியும் வாழ்ந்து காட்டிய இல்லற நெறியில் கண்ணகியின் கற்பு நெறியே அதற்குச்சான்று. ஆடல்பாடலால் தன் மனம் முழுவதையும் நாடகக் கணிகை மாதவியின் பால் செலுத்தி, தன் பொருளனைத்தையும் செல விட்டு வெறுங்கையனாய் வீடு திரும்பும் கோவலனைக் கற்புக் கரசி கண்ணகி தன் இன்முகத்தால் வரவேற்கும் காட்சி நம் மனக் கண்முன் தோன்றுகிறது. கோவலன் தன் இல்லில் கற்புக் கரசியான கண்ணகியைக் கண்டான். அவளது வாடிய மேனியைக் கண்டு வருந்தினான். வஞ்சகியோடு கூடி முன்னோர் தேடித் தந்த பொருளை எல்லாம் இழந்து வறுமையுற்றேன். இஃது எனக்கு நாணைத் தருகின்றது என்ற காலை, கோவலனின் மனத்துயரைக் கண்டறிந்த கண்ணகி தன் காற்சிலம்புகளை எடுத்து நீட்டினாள், என்னே அவளது பெற்றி! என்னே அவளது அருங்குணம்! கோவலன் அக்குணப் பெற்றியை நினைத்து மனம் குழைந்தான்.

இச்சிலம்பினை முதலாகக் கொண்டு கூடல் நகர் சென்று இழந்த பொருளை ஈட்டத்துணிந்தேன். நீயும் என்னோடு வருக என்ற அக்கணமே கணவன் சொல்லினும் சிறந்த கட்டளை பிறிதொன்றில்லை எனக்கருதி உடன் புறப்பட்டாள். இதினின்று இளங்கோவடிகள் கோவலன் கண்ணகியின் மூலமாகச் சிறந்த வாழ்க்கை நெறியை நமக்குப்புகட்டும் பெற்றி ஆழ்ந்து சிந்திக்கத் தக்கது.

இருபதாம் நூற்றாண்டில் நம் கண்முன் ஒரு சுடர் நமக்கு வாழ்க்கை நெறியைப் பற்றி, வள்ளுவரைப்பின் பற்றி, திட்ட வட்டமான ஒரு முடிவைக் காட்டி மறைந்தது. சுதந்திர இந்தியா வின் தந்தை காந்தியடிகளைப் பற்றியும் அவர் வாழ்க்கையைப் பற்றியும் நாமறிந்ததே. அன்னாரின் வாழ்க்கை நெறி இவ்வுல கத்திற்கோர் எடுத்துக் காட்டு. காந்திக்குத் தொண்டு செய்து வாழ்வதே சிறந்த கைம்மாறு என்று கருதித் தம் வாழ் நாள் முழுவதும் உழைத்தும், சுதந்திரப் போராட்ட நிகழ்ச்சிகளில் பெரும்பங்கு கொண்டும் ஒத்துழைத்த பெருமை அன்னாரின் துணைவியார் கத்தூரிபாய் அம்மையாரைச் சாரும். இதுபற்றி சத்தியசோதனை என்ற நூலில் விரிவாகக் காணலாம்.

## நூல் மதிப்புரை

தலைப்பு : கோவர்தன்ராம் (இந்திய இலக்கியச்சிற்பிகள் வரிசை)
ஆசிரியர் ; ஆங்கில மூலம் – ரமலான் ஜோஷி
தமிழாக்கம் – திலகவதி
வெளியீட்டாளர் : சாகித்திய அக்காதெமி, புதுதில்லி 1990
விலை : ரூ10/ பக்கங்கள் 68

டாக்டர் சு. ஆவுடையப்பன்
தமிழியல் துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

'என் வாழ்க்கையே நான் விடுக்கும் செய்தி' என்றார் மகாத்மா காந்தியடிகள். முன்னைய பெரியோர்களின் வாழ்க்கை வரலாறுகளே பின்னைய இளைஞர்களின் வாழ்தலுக்கான படிப் பினைகளாக அமைகின்றன. இந்நிலையில், தற்கால இலக்கியத் தில் 'வாழ்க்கை வரலாற்று இலக்கியம்' என்பதே ஒரு தனித்த இலக்கிய வகைமையாகக் கருதப்படுகிறது. இந்நூலும் 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில், குஜராத்தில் வாழ்ந்த ஓர் இலக் கியப் படைப்பாளியின் படைப்பு அனுபவங்களை வாழ்க்கை வரலாறாகத் தருகின்றது.

T. 4811

ஆங்கிலேயே ஆதிக்கத்தின் பிடியில் இந்தியச் சமுதாயம் உழலத் தொடங்கிப், பின் மேலைக் கலாச்சார மரபுகளின் பிடியிலிருந்து விலகி இந்திய ஆன்மீக மரபுகளைத் தக்க வைத்துக் கொள்ளவேண்டும் எனத் தேசப் பற்றாளர்கள் கருதத் தொடங்கிய காலத்தில் பிறந்தவராகக் கோவர்தன்ராம் திகழு கிறார். மேலைநாட்டு நாகரிகத்திற்கும் இந்திய ஆன்மீக மர பிற்கும் இடையே சமாதானமான சமன்பாடு உருவாகத் தொடங்கிய காலமான 1870, 80களில் (இக்கால கட்டத்தில் தான் ஆரியசமாஜம், பிரம்மசமாஜம், பிரார்த்தனசமாஜம் ஆகிய ஆன்மீக நிறுவனங்கள் உருவாயின.) தமது படைப்பியக்கை முடுக்கி விட்டவர் கோவர்தன்ராம் "அவர் மேலைநாகரிகத்தின் அறிவாண்மையையும் கீழைக்கலாச்சாரத்தின் ஆன்மீகத்தையும் தம்முள் நிறைத்துக் கொண்டார்" என்று நூலாசிரியர் குறிப்பிடு வது இங்குக் கருதத்தக்கது.

குஜராத் மாநிலம் நதியாத்து என்னுமிடத்தில் 1855 ஆம் ஆண்டில் பிறந்த கோவர்தன்ராம் தமது இருபதாவது வயதி

லேயே தமது வாழ்க்கையின் எதிர்காலம் குறித்து ஒரு தெளிவான திட்டம் வகுத்துக் கொண்டார். அதன்படி வழக்கறிஞராகப் பணியாற்றிய அவர் தமது 43ஆம் வயதில் வழக்கறிஞர் தொழிலிருந்து ஓய்வுபெற்று, வாழ்க்கை முழுவதையும் எழுத்துக்கே அர்ப்பணம் செய்து, முழுநேரப் படைப்பாளராக வாழ்ந்து மறைந்தவர். ஆன்மீகம், தத்துவம் ஆகியவற்றில் அவர் முழுநாட்டம் கொண்டிருந்ததால், அதன்மூலம் நாட்டிற்கும் சமூகத்திற்கும் சேவைபுரிய எண்ணங் கொண்டவராய் இருந்தார்.

கோவர்தன்ராமின் படைப்புகளைப் பொறுத்தமட்டில், 'சரஸ்வதிசந்திரன்' என்ற புதினமும், 'ஸ்நேகமுத்ரா' முதலான கவிதைகளும், லீலாவதி ஜீவன்கலா' முதலான வாழ்க்கை வரலாற்று நூல்களும் குறிப்பிடத் தகுந்தவைகளாகத் திகழுவதை இந்நூல் விரிவாக எடுத்துரைக்கிறது. 'சரஸ்வதி சந்திரன்' என்ற புதினம் குஜராத்திய இலக்கிய உலகில் அதிகம் பேசப்படும் படைப்பாகத் திகழுகிறது. சமூகம், வீடு, குடும்பம் மற்றும் இவை சார்ந்த பிரச்சினைகள் இப்புதினத்தில் இந்தியத் தன்மை சார்ந்த நிலையில் விவரிக்கப்பட்டுள்ளதாக ஆசிரியர் குறிப்பிடுகிறார். 'ஸ்நேகமுத்ரா' என்ற கவிதை கோவர்தன்ராமின் மறைந்துபோன முதல் மனைவியின் நினைவாக எழுதப்பட்டதாகும். 'லீலாவதி ஜீவன் கலா' என்ற வாழ்க்கை வரலாற்று நூல் கோவர்தன்ராமின் மூத்த மகள் லீலாவதியின் நினைவாக எழுதப்பட்டதாகும். கோவர்தன்ராம், இவ்விருநூல்களிலும் 'துன்பத்தைக் கலைப் படைப்பாக்கித் தரும் படைப்பு முயற்சியில் வெற்றிகண்டுள்ளதாக அசிரியர் சுட்டுகிறார், இப்படைப்புக்கள் தவிர கோவர்தன்ராம் விமர்சனநூல்களும் எழுதியுள்ளதாகக் குறிப்பிட்டு அவைபற்றிய செய்திகளை ஆசிரியர் ஓர் இயலில் விளக்கியுள்ளார். ''விமரிசனம் என்பது குற்றம் கூறுவது மட்டுமாக இருந்தால் அது படைப்பிலக்கியத்தை விட எளியதாகி விடும். விமரிசகன் என்பவன் சிறந்தவற்றையும் தேடிப் பிடித்து மதிப்பீடு செய்யவேண்டும் என்பது கோவர்தன்ராம் கொண்டிருந்த விமரிசனக் கோட்பாடு என்பதை இவ்வியலின் வாயிலாக அறியமுடிகிறது.

மொழி, எழுத்து, சட்டம், அரசியல், சமூகம், பொருளாதாரம், மதம், ஆன்மீகம் எனப் பல்வேறு துறைகளில் தமது

எழுத்துப் பணியை மேற்கொண்ட கோவர்தன்ராமின் பல்வேறு பட்ட படைப்புலக அனுபவ வாழ்க்கையை இந்நூலின் வாயிலாக அறியமுடிகிறது.

இந்தியப் பண்பாட்டின் பின்னணியைக் கூறி, அப்பண்பில் தோன்றிய கோவர்தன்ராம் எவ்வாறெல்லாம் வாழ்க்கையைப் படைப்பிலக்கியத்திற்காக வடிவமைத்துக் கொண்டார் என்பதை அவரது படைப்புகள் வாயிலாகவும், நேரடியான வாழ்க்கை முறை வாயிலாகவும் இந்நூல் சுருங்க விளக்குகிறது. அவரது குறிப்பேடுகளிலிருந்து சில பகுதிகள், அவரைப் பற்றி இது வரை வெளிவந்துள்ள நூல்களின் பட்டியல் போல்வன இந்நூலின் பின்னிணைப்பில் தரப்பட்டுள்ளமை பயனுள்ளசி முயற்யாகும்.

'ஒரு படைப்பாளியின் வாழ்க்கை' என்கிற பெற்றியில் இந்நூல் என்றும் பயனுள்ள நூலாகும்.

---

நூல் தலைப்பு : தேன் சொட்டுக்கள்
ஆசிரியர் : செம்மை நதி ராசா
வெளியீட்டாளர் : பதி பதிப்பகம், கோவில்பட்டி – 1990
விலை ரூ 12/ பக்கங்கள் – 120

---

தற்காலக் கவிதை, மரபைப் புறக்கணித்த இலக்கணமிலாக் கவிதையாக வந்து கொண்டிருக்கின்ற போதும், பிறிதோர் புறத்தில் மரபுக் கவிதையும் நூல் வடிவம் பெற்றுக் கொண்டுதான் இருக்கிறது. இந்நூல் இவ்வகை மரபுக் கவிதைகளைக் கொண்ட தொகுப்பாகும்.

'தேன்சொட்டுக்கள்' என்ற தலைப்பில் குழந்தைகளுக்கான பல்வேறு சந்தநடையில் இயற்றப்பட்ட கவிதைகளும், 'காற்றும் கதிரும்' என்ற தலைப்பில் 200 வெண்பாக்களால் இயன்ற கதைக் கவிதையும் இந்நூலில் இரண்டு பிரிவினவாக அமைவு பெற்றுள்ளன.

'மரபுக்கவிதை சாரமற்ற நிலையில் நீர்த்துப் போய் விட்டது' என்ற புதுக்கவிதையாளரின் குற்றச்சாட்டு இந்நூலில் ஓரளவு தோல்வி கண்டுள்ளது. காரணம், இதிலுள்ள குழந்தை

களுக்கான கவிதைகளில் அமைந்துள்ள சந்தநயமும், இசைப் பாங்கும், சொற்களுக்கு இடையேயான இணைவுப் பாங்கும், நம்மை வடிவம் பற்றிய சிந்தனையை அறவே மறக்கச் செய்கின்றன.

'சிறுவர் பாடல்கள்' எனும் இலக்கியவகைமை அருகி வருகின்ற இக்காலத்தில் இந்நூலின் வரவு போற்றுவதற்குரியது. உதயம் தாமரை, கடல், யானை, பூனை, எலி, கொக்கு, மீன், தவளை, நண்டு, குதிரை, வண்ணத்துப்பூச்சி போன்ற விலங்கு, பறவை பற்றிய கற்பிதப் புனைவுகளும் வழக்கமான சிறுவர் பாடல் இயல்புடன் இந்நூலில் வலம் வந்துள்ளன. தவளை பற்றி ஆசிரியர் கூறும் பாடல் இங்குச் சுட்டத் தகுந்ததாகும். இப்பாடலில் ஆசிரியர் தவளையினது கூச்சலை. சொற்சேர்க்கையின் மூலமாகவே நம் காதுகளில் ஒலிக்கச் செய்து விடுவது ஆசிரியரின் கவித்திறனுக்குச் சான்றாகும்.

இந்நூலின் பாடல்கள் சிறுவர்க்கானவை என்றாலும், அவற்றிலும் அறிவுரை பகரும் போக்கை ஆசிரியர் மேற்கொண்டிருப்பது குறிப்பிடத்தகுந்தது. சடுகுடு விளையாட்டுப் பற்றிய ஒரு கவிதையில், விளையாட்டை விரிவாகக் காட்சிப் படுத்தும் ஆசிரியர், இறுதியில் வரும் 4 வரிகளில் அவ்விளையாட்டின் தத்துவம், பயன் போல்வனவற்றைச் சுருக்கமாகவும் எளிமையாகவும் விளக்கிவிடுகிறார்.

இந்நூல் தற்காலச் சமூக நடப்புகளையும் பிரதிபலிக்கும் தன்மை வாய்ந்ததாக உள்ளது. சந்தச் சொற்சேர்க்கை வண்ணத்தால் சிறுவர்களையும், கருத்துக்களின் செறிவு வண்ணத்தால் பெரியவர்களையும் இந்நூல் கவரும் என்பதில் ஐயமில்லை.

# மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடுகள்

1. மதுரைத் தமிழ்ச்சங்க வரலாறு 12-00
2. பன்னூற்றிரட்டு 5-00
3. தமிழ்ச் சொல்லகராதி 25-00
4. மாறனலங்காரம் (பொருளணியியலுரை) 25-00
5. பெருந்தொகை (முதல் 50 பாடல்கள் மூலமும் உரையும்) 2-00
6. குருகைமான்மியம் 10-00
7. டி.சி. ஸ்ரீனிவாசய்யங்கார் நினைவு மலர் 1-00
8. பெருந்தொகை 15-00
9. செந்தமிழ்த் தொகுதி அட்டவணைக் குறிப்பு
10. செந்தமிழ்த் தொகுப்பு (ஓர் ஆண்டு) 10-00
11. கோவை, கலம்பக நூல்கள் 12-00
    1. மாறனகப் பொருளும் திருப்பதிக் கோவையும்
    2. மதுரை மும்மணிக் கோவை
    3. சிராமலைக்கோவை
    4. கலசைக்கோவை
    5. திருக்கலம்பகம் (மூலமும் உரையும்)
    6. திருவருணைக் கலம்பகம்
    7. குருமொழி வினாவிடை
12. உலா நூல்கள் 10-00
    1. திருவாரூருலா
    2. திருச்சிறு புலியூர் உலா
    3. விக்கிரம சோழனுலா
    4. கடம்பர் கோவில் உலா
    5. தேவையுலா
    6. புலவராற்றுப்படை
13. பாமாலை நூல்கள் 12-00
    1. திருப்பணிமாலை
    2. சூடிக்கொடுத்த நாச்சியார் தோத்திரப் பாமாலை (மூலமும் உரையும்)
    3. திருக்குற்றாலமாலை
    4. திருப்புல்லாணிமாலை
    5. திணைமாலை நூற்றைம்பது (மூலமும் உரையும்)
    6. கேசவப் பெருமாள் இரட்டை மணிமாலை
    7. கலைசைச் சிலேடை வெண்பா
    8. திருவாரூர் நான்மணிமாலை (மூலமும் உரையும்)

T. 4811

14. **இலக்கிய நூல்கள்** 12-00

1. முத்தொள்ளயிரச் செய்யுள்
2. ஐந்திணையைம்பது
3. திருநூற்றந்தாதி (மூலமும் உரையும்)
4. பழமொழி ( " " )
5. சங்கர நயினார் கோவில் அந்தாதி
6. திருத்தணிக்கைத் திருவிருத்தம்
7. நான்மணிக்கடிகை (மூலமும் உரையும்)

15. **இலக்கண நூல்கள்** 5-00

1. அரும்பொருள் விளக்க நிகண்டு
2. பன்னிரு பாட்டியல்
3. அநுமான விளக்கம்

16. **மநிஷா பஞ்சகம்**

1. மநிஷா பஞ்சகம்
2. ஞானாமிர்தக் கட்டளை
3. அட்டாங்க யோகக் குறள்
4. இராமோதந்தம்

# செந்தமிழ்

அரிய ஆராய்ச்சிக் கட்டுரைகள் அடங்கிய இவ்விதழ் ஆண்டுக்கு நான்குமுறை வெளியிடப்பெறுவது. ஆண்டுச் சந்தா ரூ.15.00). செந்தமிழைக் கண்ணுறும் தமிழன்பர்கள் சந்தாதாரராகச் சேர்ந்து பிறரையும் சந்தாதாரராகச் சேரத் தூண்டி இதழின் வளர்ச்சிக்கு உதவுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

குறிப்பு

1. புத்தகங்கள் வேண்டுவோர் தேவைக்கு எழுதும்பொழுது 25 விழுக்காடு முன் பணம் அனுப்ப வேண்டும். பாக்கித் தொகைக்கு நூல்கள் வி. பி. பி. மூலம் அனுப்பப்படும்.
2. விற்பனையாளர்களுக்கும், நூலகத்திற்கும் 15 விழுக்காடு கழிவு கொடுக்கப்படும்.
3. நூல்கள் அனுப்புவதற்கான செலவுகளை வாங்குபவரே ஏற்க வேண்டும்.

செயலாளர்

மதுரைத் தமிழ்ச் சங்கம்

மதுரை–1.

---

❋ பரணி அச்சகம், 4, மேல வடம் போக்கித் தெரு, மதுரை–1